MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR. MADRAS-41.
7082

உ

திருப்பெருந்துறையென்பது

தமிழ்நாட்டு

# ஆவுடையார்கோவிலே.

இது:

புதுக்கோட்டைக்காலேஜ்

பிரின்ஸ்பாலாகவிருந்த

எஸ். இராதாகிருஷ்ணயரால்

எழுதப்பெற்றது,

மதுரை:

தமிழ்ச்சங்கம்பவர்ப்பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1915.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41.

உ

# முன்னுரை.

பன்னிரண்டு பதின்மூன்று நூல்களும் பல சாசனங்களும் திருப்பெருந்துறை என்னும் ஸ்தலம் ஆவுடையார் கோவிலேயென்று ஒரேவாக்காக உள்ளங்கைநெல்லிக்கனிபோற் காண்பிக்கின்றனவென்றும், இவ்விஷயத்தைமறுப்பவர்களின் உரைகள் சரியான ஆக்ஷேபங்கள் ஆகாவென்றும் இப்புத்தகத்திற் காட்டியிருக்கிறேன்.

பெருந்துறையைப்பற்றிப்பேசும்பொழுது ஒரு பெருந்தவறு பலராற் செய்யப்படுகிறது. மாணிக்கவாசகர் குதிரை வாங்கப் புறப்பட்டாரென்றும், அவர் திருப்பெருந்துறையில் தங்கியிருந்தாரென்றும் தெரிந்துகொண்டிருப்பவர்களிற் பலர், திருப்பெருந்துறை ஒரு கடற்றுறைப்பட்டினமென்றும், மாணிக்கவாசகர் அவ்வூரைநோக்கியே புறப்பட்டார் என்றும் நினைக்கிறார்கள். இது ஒரு பெருந்தவறு என்று விஸ்தாரமாக இப்புத்தகத்திற் காட்டியிருக்கிறது. கீழ்சமுத்திரக்கரையைநோக்கி அவர் புறப்பட்டார் என்றும், நடுவழியில் "பெருந்துறையடைந்தபோதே" சிவன்செயலாற் "செயல்வேறுபட்டு"த் தாம் போகவேண்டிய "பாதையிருப்பதறியாமல்" "திகைப்பூடுமிதித்தவர்போல்"மயங்கி அங்கேயே தங்கிவிட்டார் என்றும் அறிகிறோம்.

எஸ். இராதாகிருஷ்ணன்.

# திருப்பெருந்துறையென்பது தமிழ்நாட்டு ஆளுடையார்கோவிலே.*

சென்ற புரட்டாசிமாதத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் "மாணிக்கவாசகர்கால ஆராய்ச்சி" என்ற தலைப்பின்கீழ் மகா-ள-ள-ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்கள் திருப்பெருந்துறைத்தலம் மலைநாடாகிய "மலையாளநாட்டில் இருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்" என்று கூறியிருக்கிறார்கள். இவ்வுரை உண்மைக்குமாறுபாடுள்ளதென்று தோன்றி நான் எனக்குத்தெரிந்ததை எழுதலானேன்.

I. (1) இவ்வூர் மிழலைநாட்டில் இருந்ததென்று யாவரும் ஒப்புக்கொள்வார்களென்று எண்ணுகிறேன். மாணிக்கவாசகர் எத்திக்கினின்று மதுரைக்குத் திரும்பிவந்தனரோ அத்திக்கினின்று குதிரைகள் வந்தனவாகும். அத்திக்குத்தான் பெருந்துறையுள்ள திக்கு. மிழலைநாட்டுநரிகள் குதிரைகளாகமாற்றப்பட்டு அவை மிழலைநாட்டினின்று மதுரைக்குவந்தன.

"ஒழுக்கந் தருமந் தவந்தான முறவு வாய்மை பொறைமற்றும்
விழுப்ப முள்ள சூத்திரர்வாழ் மிழலை நாட்டு நரியெல்லா
மழைத்துத் தெருட்டி விளையாட லவனி மீது நனிவிளங்கத்
தழைத்த தலத்தை நரிக்குடியென் றின்றுஞ் சொல்வர் சான்றோரே"

என்று தில்லைநம்பி தமமுடைய திருவிளையாடற்புராணத்திற்கூறியிருப்பதைப்பார்க்க. குதிரைகள் மிழலைநாட்டினின்றுவந்தனவாகையால், திருப்பெருந்துறை மிழலைநாட்டிலிருந்தது என்பது சித்தம். மாணிக்கவாசகர் கொச்சிநாட்டுக்குப்போய் அப்பக்கத்திற் குதிரை வாங்குவதாகக்கூறி அவ்விடத்தினின்று மதுரைக்குத் திரும்பிவந்திருந்தாற் கொச்சிநாட்டுநரிகளல்லவோ பரிகளாக மாற்றப்பட்டிருக்க வேண்டும். இப்பாக்கியத்தை அந்நாட்டுநரிகள் அடையவில்லையே

* ஆவுடையார்கோவில் என்பதும் இதுதான். "ஆளுடையார்கோவில்' என்பது, பாஷாவிசாரம்செய்பவர்கள் "சோம்பேறித்தனவிதி" என்றுகூறும் வழியினாற் காலக்கிரமத்தில் "ஆவுடையார்கோவில்" என்று மாறியிருக்கலாம் "ஆவுடையார்" என்பதைப் "பசுவையுடையபதி" அல்லது "ஆளுடையநாயகன்" என்று கொள்ளலாமா?

(2) இம்மிழலைநாடு எங்கிருந்தது?

1910—11-ஆம் வருஷத்திய சென்னைராஜதானிக்கல்வெட்டு இலாகாவின் "ரிப்போர்ட்டில்" 1910-ஆம் வருஷத்து 47-ஆம் சிலா சாசனமென்று குறித்திருக்கும் கல்வெட்டின்படி இந்நாடு விருதராஜ பயங்கரவளநாட்டின் ஒருபாகம் என்று அறியலாம்.

தேர்க்காட்டூர் என்ற ஊரிலுள்ள பழையவேளார்குடி ஒன்றைச் சேர்ந்த வேளார் ஒருவரது "கானநாட்டுவிருத்தாந்தம்" என்ற கையெழுத்துச்சுவடியின்படியும், மற்றுள்ள பழைய ஏடுகளின்படியும்,

i. தெற்கேயுள்ள பாண்டிநாட்டிற்கும் வடக்கேயுள்ள புனல் *நாட்டிற்கும் இடையிலுள்ள பன்றிநாடு(மற்றி நநாடுகளின் சில பாகங்களுடன்) கோனாடு, கானாடு என இருபெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததென்றும்,

ii. கோனாடு சோழவந்தான்வரை பரவியிருந்ததென்றும்,

iii. கானநாடு, தொண்டி காளையார்கோவில்வரை எட்டியிருந்ததென்றும்,

iv. இவற்றின்பிரிவெல்லை புதுக்கோட்டைக்கு நான்குமைலுக்குத்தெற்கேயோடும வெள்ளாறென்றுகொள்ளலாம் என்றும்,

v. கோனாடு, உறையூர்க்கூற்றம ஒலலையூர்க்கூற்றம் † (புதுக்கோட்டைக்குமேற்கிலுள்ள ஒலியமங்கலத்தைக்கொண்டது) உறத்தூர்க்கூற்றம் (இது புதுக்கோட்டைராஜ்யத்தின்வடமேற்குப்பாகத்திலுள்ள பழையகொடும்பாளூரைக்கொண்டது) என மூன்றுகூற்றங்களாகப் பிரிந்திருந்ததென்றும்,

vi. கானநாடு ஏழுகூற்றங்களாகப்பிரிந்திருந்ததென்றும்,

vii. அவற்றுள், மிழலைக்கூற்றம் ஒன்று என்றும் விளங்கும்.

---

* பாண்டிநாடு, பனல்நாடு, பன்றிநாடு என்றபெயர்கள் தேர்க்காட்டூர்க் கையெழுத்துப்பிரதியிலில்லை. பன்றிநாடு என்பது வராகமலையெனப்படும் பன்றிமலை அல்லது பழனிமலையுள்ளநாடு, அல்லது பன்றிக்குறும்பர்பன்னிருவர் இருந்துவந்தநாடு. தில்லைநம்பியின் திருவிளையாடற்புராணம், 59 ம் திருவிளையாட்டைப்பார்க்க. பழனி என்பது பன்றியென்பதன்விகாரம் என்பர்.

† இக்கூற்றத்திலுள்ள ஒல்லையூரைவர்ணிக்கும் புறநானூற்று 242 ம் பாட்டை மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள் நன்குக அறிந்தவர், அதை அழகாக ஆங்கிலத்தில் அவர் மொழிபெயர்த்திருக்கிறாராதலால்.

U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS



மேற்கூறிய கானநாட்டின் ஒருபெரியபாகத்திற்கு ஏறக்குறைய 800 வருஷங்களுக்குமுன் "விருதராஜபயங்கர*சோழவளநாடு"என்று பெயரிடப்பட்டது.

"கானநாடாகிய விருதராஜபயங்கரவளநாடு"† என்னும் சொற்றொடரைக்கொண்ட புதுக்கோட்டைராஜ்யத்தின் சிலாசாசனங்களின் பிரதிகள் 30-க்குக்குறையாமல் என்னிடமிருக்கின்றன.

ஆதலாற், பாண்டியநாட்டிற்கு வடக்கெல்லையெனப்படும் வெள்ளாற்றிற்குத் தென்பாகத்திலுள்ள கானநாட்டின் ஒருபாகந்தான் திருப்பெருந்துறையைக்கொண்ட மிழலைநாடாம்.

(3) மிழலைக்கூற்றத்தின்முக்கியநதி திருமெய்யத்தலத்திற்கு ஒருமைல்வடக்கிலும் வெள்ளாற்றிற்கு ஆறு அல்லது ஏழுமைல் தெற்கிலும் ஓடித் திருப்புனவாயில் என்னும் சிவஸ்தலத்தின்பக்கத்திற் கடலிற்சேரும் பாம்பாறு என்றுகூறலாம். இந்தமிழலைநாட்டின் பெயரைக்கொண்ட புதுக்கோட்டைராஜ்யத்துச்சிலாசாசனங்களின் பிரதிகள் பத்தொன்பதிற்குக்குறையாமல் என்னிடமிருக்கின்றன. இவற்றுள், சிலகல்வெட்டுக்கள் மிழலைநாட்டுமேல்பாகத்தையும்,வேறு சில மிழலைநாட்டுநடுப்பாகத்தையும் சேர்ந்தவை யென்று பின்வரும் கல்வெட்டுவாக்கியங்களால்விளங்கும்.

1. தாஞ்சூர் (மூன்றுகல்வெட்டுக்கள்) "மிழலை மேல்கூற்று மீபாம்பாற்றுநாடு"
2. காரமங்கலம் (மூன்றுகல்வெட்டுக்கள்) ஷை ஷை
3. வாளரமாணிக்கம் (ஆறுகல்வெட்டுக்கள்) ஷை ஷை

---

* கலிங்கத்துப்பரணியைப்பார்க்க.

† சென்னைக் கல்வெட்டு இலாகா உத்யோகஸ்தர்களாற் பிரிகண்ட இலக்கங்களாகத் தாக்கல்செய்திருக்கும் கல்வெட்டுக்களையும்பார்க்க.

1906-ம் வருஷத்து 388-ம் இலக்கக்கல்வெட்டு.

1907-ம் ,, 162-ம் ,,

ஷை 163-ம் ,,

4. இரும்பாநாடு* புதுக்கோட்டையின் எல்லைப்பாகம் (ஏழுகல்வெட்டுக்கள்) இவற்றுள் ஆறுசிலாசாசனங்களில், 'மிழலைநாட்டு நடுவில்கூற்று'†. என்றும், ஏழாவதுகல்வெட்டில் "மிழலைநாட்டு‡துளம்பூரான" என்றும் கண்டிருக்கிறது.

மேற்கூறிய நான்கு ஊர்களும் ஆவுடையார்கோவில்ஸ்தலத்தைப் போல் புதுக்கோட்டைராஜ்யத்தின்தென்கிழக்கில் உள்ளவை. அவ்வூர்கள் ஆவுடையார்கோவிலினின்று முறையே 12, 9, 8, 4 மைல் தூரத்திலுள்ளவை என்றால்அந்தத்தலத்திற்கு இவை சமீபத்திலேயே இருந்துவந்திருக்கின்றனவென்றும், ஆவுடையார்கோவில் மிழலைக்கூற்றத்தில் இருந்திருக்கவேண்டுமென்றும் எண்ணலாம். மிழலைநாட்டின் "நடுவில்கூற்று" ஆவுடையார்கோவிற்பக்கமும் "மீபாம்பாற்றுக்கூற்று" புதுக்கோட்டைராஜ்யத்தின்பாகமும் ஆகின்றதனால், மிழலைநாடு (புறநானூற்று 24-ஆம்பாட்டினின்று நாம் அறிகிறபடி) கடற்கரைவரைபரவியிருந்ததென்றெண்ணுவதுடன், அதன்கீழ்பாகம் கீழ்பாம்பாற்றுக்கூற்று அல்லது கீழைக்கூற்று என்ற பெயரைத் தாங்கியிருக்கலாம் என்றும் ஊகிக்கலாம். ஆதலால் திருப்பெருந்துறை கீழ்கடற்கரையை அடுத்த ஊரே.

II வடமொழி 'ஹாலாஸ்யமாகாத்மியம்' என்னும் கிரந்தம் திருப்பெருந்துறை கீழ்சமுத்திரக்கரையை அடுத்திருந்ததென்று இரண்டு சுலோகத்திற் சுருக்கமாயும் தெளிவாயும் தெரிவிக்கிறது.

---

*இது, பாண்டியமண்டலத்தைச்சார்ந்த சுந்தரபாண்டியவளநாட்டின்கண் இருந்தது என்று சிலகல்வெட்டுக்கள்கூறும். மாணிக்கவாசகர் இருந்ததாக மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள்கூறியகாலத்திற்குப் பலநூற்றாண்டுகளுக்குப் பின் இராஜராஜசோழவளநாடு என்றும் இவ்வளநாடு பெயர்பெற்றிருந்தது.

†மிழலைக்கூற்றத்தின் இந்நடுவிற்கூற்று, சென்னைக் கல்வெட்டு இலாகாவின் 1908-ஆம்வருஷத்து 150-ஆம் இலக்ககல்வெட்டிற் பேசப்பட்டிருக்கிறது.

‡மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமிஐயங்காரவர்கள் தம்முடைய "Ancient India" அல்லது புராதன இந்தியாவின்படங்களொன்றில் மிழலைநாட்டையாண்ட எவ்வியின்தேசத்தைத் திருநெல்வேலிஜில்லாப்பக்கத்திற்காட்டியிருப்பது எக்காரணத்தினால் என்று விளங்கவில்லை.

"𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌦𑌿𑌶𑌂 𑌪𑍍𑌰𑌯𑌯𑍌 𑌧𑍀𑌮𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌤𑌟𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ।
[illegible] ॥
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍍𑌰𑌮𑍍𑌯 𑌵𑌿𑌶𑍍𑌰𑌮𑍍𑌯 [illegible] ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌤𑍀𑌰𑍍𑌥𑌮𑌿𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌸𑌂𑌸𑌾𑌰𑌾𑌰𑍍𑌣𑌵𑌤𑌾𑌰𑌕𑌂 ॥"*

அதாவது (குதிரைவாங்கப்புறப்பட்ட அந்த) "புத்திமான் கிழக்கு முகமாகக் கீழ்சமுத்திரக்கரையை நோக்கிச் சென்றார். கணக்கற்ற பணக்குவியலுடனும் சேனையுடனும் கூடினவராய் ஆங்காங்குச் சிரம பரிஹாரத்திற்காக வழியில் தங்கித்தங்கிப்போன அவர், தனக்குயர் வில்லாத "ஸ்ரீமகாதீர்த்தம்" அல்லது "திருப்பெருந்துறை" [ஸ்ரீமகாதீர்த்தம் = திருப்பெருந்துறை; ஸ்ரீ = திரு; மகா = பெரும்; தீர்த்தம் = நீர்த்துறை.] என்னும் சிவஸ்தலத்தை அடைந்தார்.

இவ்விருசுலோகங்களினின்று திருப்பெருந்துறை மதுரைக்குக் கிழக்குத்திக்கிலேதான் இருக்கிறது என்பது வியக்தமாகவிளங்குகிறது.

III. மற்றும், மூன்று சிவஸ்தலங்களைக்குறித்த விடுகதையைப் போன்ற பழமொழியொன்று புதுக்கோட்டைக்குத்தென்கிழக்குப்பாகத்தில்வழங்கிவந்தது. அப்பழமொழி, "கரை குளத்தினின்று ஒருகாதம் துறையினின்று ஒருகாதம்" என்பதுதான். இவ்விடுகதையில் மூன்று ஸ்தலங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. கரை என்பது, அன்னப் முடியைத்தேடுவதாகவும், வராகம் அடியைத்தேடுவதாகவும் செய்யப் பட்ட ஆச்சரியகரமான வேலைப்பாடமைந்த "லிங்கோத்பவர்" விக்ரகத்தைக்கொண்டு முற்காலத்திற் பெயர்பெற்றிருந்த பழங்கரைத்தலம் குளம் என்பது, தேவாரத்திற்கூறப்பட்டுள்ள வைப்புத்தலங்களுள் ஒன்றாகிய வரந்தை என்று சிலர் ஊகிக்கும் பிரசித்திபெற்ற திருவரன்குளம்†. துறை என்பது பிரஸ்தாபத்திலுள்ள திருப்பெருந்துறை

*ஹாலாஸ்யமாஹாத்மியம் 64-ஆம் அத்தியாயம் 42, 43, 44-ஆம் சுலோகங்கள்.

† மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இத்தலமான்மியத்தைப்பாடஆரம்பித்து நாட்டுப்படலத்துடன் சில அசௌகரியங்களைமுன்னிட்டு நிறுத்திவிட்டார்கள் மகாமகோபாத்தியாயர் பிரும்மஸ்ரீசாமிநாதையரவர்கள் அச்சிட்டிருக்கும் பிள்ளையவர்களின்பிரபந்தத்திரட்டைப்பார்க்க.

இவ்விடுகதைரூபமாக, பழங்கரை எங்கேயிருக்கிறது? என்று கேட்ட ஒருவருக்கு "(பழங்)கரை(திருவரன்)குளத்தினின்று ஒருகாத தூரத்திலும், (திருப்பெருந்)துறையினின்று ஒருகாததூரத்திலும் உளது" என்று மறுமொழிகொடுக்கப்பட்டதாம். ஆகவே, திருப்பெருந்துறை மற்ற ஆதாரங்களின்படி எவ்விதம் அமையுமோ அவ்விதமே புதுக்கோட்டைக்கு ஏறக்குறைய 25-மைல்தூரத்திலுள்ள ஸ்தலமென்று ஏற்படுகிறது. அரண்தாங்கி புதுக்கோட்டையினின்று இருபதுமைல் என்று கூறும்பொழுது விடுகதையிற்காட்டியகணக்குத் தவறன்றென்றுவிளங்கும்.

ஆதலால், திருப்பெருந்துறை மிழலைநாட்டு ஊர் என்றும், அந்நாடு தஞ்சாவூர்ஜில்லா ஆளுடையார்கோவிற்பாகத்தை உட்கொண்டதென்றும், ஆதலால் திருப்பெருந்துறை என்னும் ஸ்தலம், ஆளுடையார் கோவிலே என்றும் கொள்ளல்வேண்டும்.

IV. திருப்பெருந்துறை மேலைச்சமுத்திரக்கரையில் இருந்திராது என்று திருவிளையாடற்புராணத்தினின்று காட்டலாம்.

குதிரைவாங்கப்புறப்பட்ட மாணிக்கவாசகர் எத்திக்கிற்போனார்?

"மேலுறு சாபந் தீர விந்திரன் வெள்ளை யானை
காலைவந் திறைஞ்சுந் தொல்லைக கானையம் பதிய டைந்தார்"*

என்று தில்லைநம்பி கூறியிருக்கிறார். இதிற் சுட்டிக்காட்டியிருக்கும் ஸ்தலம் திருக்கானப்பேர் அல்லது காளையார்கோவிலாம். (அடுத்த பாட்டையும்பார்க்க). இது மதுரைக்குச் சுமார் 40 மைலுக்குக்கிழக்கிலுள்ள ஊர். மேலைச்சமுத்திரக்கரைக்கு மதுரையினின்றுபோகும் ஒருவருக்குக் காளையார்கோவிலில் என்னவேலை இருந்திருக்கக்கூடும். அதிகமாகவளர்ப்பானேன்! வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்திற் கூறியபடி,

"ப்ராஜ்ஞஸ்ஸம்ப்ரயயௌ ப்ராக்ஸமுத்ரதடம் ப்ரதி।"

"அம்மேதாவி கிழக்குமுகமாகக் கீழ்சமுத்திரக்கரையைநோக்கிப் புறப்பட்டார்" என்றே கொள்ளல்வேண்டும்.

* திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணம் 27-ஆம் திருவிளையாடல் 31-ஆம் பாட்டையும் 32-ஆம் பாட்டையும் பார்க்க.

V. "ஆளுடையார்கோவில்"என்பதற்குப்பொருள் ஆளுடைய நாயகரதுகோவில், அதாவது ஒரு பக்தரை (ஆசிரியவடிவங்கொண்டு) ஆட்கொண்டருளியபெருமானிடம் என்பதாம். இவ்வூருக்கேற்ற இவ்வருமைப்பெயரை விட்டுவிடக்கூடாதென்று தில்லைநம்பி தமது திருவிளையாடற்புராணத்தில், "(பெருந்)துறையாளுடையநாயகன்"* என்று கூறியிருக்கிறார். வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்திலும்

"ஜநவந்நாதர்""ஆள் உடையநாயகன்"

[ஜநம்=ஆள்; ஜநவாந்=ஆளுடையவன்; நாதன்=நாயகன்]

என்று பத்துப்பன்னிரண்டு இடங்களிலும்,

"ஜநவ த்ஸ்வாமிநம்" அல்லது "ஆளுடையஸ்வாமியை"†

என்று ஓரிடத்திலும் கூறியிருப்பதைக்காண்க. இவ்வூர் ஸ்வாமியின் மற்றநாமங்களில் அசுவநாதர், உபதேசஸ்தலநாயகர், உபாத்தியாயர் குருந்தவனேசுவரர், முந்நூற்றொருவர் என்ற பெயர்களும் கவனிக்கத் தக்கவை. ஆதலாற் பெருந்துறையென்பதும் ஆளுடையார்கோவில் என்பதும் ஒரு ஊரையேகுறிக்கின்றன என்று கொள்ளலாம்.

VI. கானநாட்டுவிருத்தாந்தத்தைக்கூறும் தேர்க்காட்டூர்க் கையெழுத்துப்பிரதி பழையநூலாகவே‡தோன்றுகிறது.

---

* 28-ஆம் திருவிளையாடலின் 13-ஆம் பாட்டு.

†64ஆம்அத்யாயம் 53ஆம் சுலோகத்தைப்பார்க்க. செப்புப்பட்டயம் முதலிய வற்றிற்காணப்படுகிறது என்று மகாமகோபாத்யாயர் பிரும்மஸ்ரீ சாமிநாதைய ரவர்கள்கூறும் ஆளுடைய (பரமு)ஸ்வாமி என்னும்பெயர் இப்பெயரைச்சார்ந் தாகக்கொள்ளலாம்.

‡ இது எக்காலத்துநூல் என்று கூறமுடியாது. அதிற்கண்ட கானநாட் டின்பிரிவுகளையோசித்தால் நவீனநூலாக அதைக்கொள்ளுவது தவறு என்பே விளங்கும். கானநாட்டின்பிரிவுகளைப்பற்றிப்பேசுமிடத்து,

"அன்னமிடு சோமனெனு முக்கிரப் பெருவழுதி அம்புவியில் ஆளும் நாளில்
அரிதான நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் ஆராய்ந்து தேடிவைத்த
நன்னிலந்தன்னில்—எழுகூற்றம்" பதினெட்டுநாடு

"வெ(ற்றி)த்திவாழ்கின்றதிருமிழலைக்கூற்றமிகுந்தமுத்தூர்க்கூற்றம்
பத்தியான அரும்பூர்க்கூற்றம்பாரமான திருக்கானைக்கூற்றம்
முத்தமிழ்சேர்தொகுவூர்க்கூற்றம்முதன்மையானகொடுமுளூர்க்கூற்றம்
எத்திசையான இளையான்குடிக்கூற்றம்"

என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலில், திருப்பெருந்துறையைப்பற்றிக்கூறியிருப்பது அத்தலம் கானநாட்டைச் சேர்ந்தது என்பதை விளக்கும். "மாணிக்க வாசகர்திருவிளையாட்டம் பெருந்துறை கைலாசநாதர் குருதேசிகனுடு" என்று அத்தலமிருந்த குறும்பர்நாட்டைக்கூறித் "திருமாணிக்க நல்லூர்"* என்பதையும் அதன்சம்பந்தமாக எடுத்தெழுதி, அதன் கீழ்

முத்தூர்க்கூற்றம் என்பது புறநானூற்று 24 ஆம் பாட்டிற் கூறப்பெற்ற முத்தூற்றுக்கூற்றமென் றெண்ணலாம். முத்தூற்றுக்கூற்றம் மிழலைநாட்டை யடுத்திருந்ததாக அந்நூலிற்கூறியவிதம் இங்கும் மிழலைக்கூற்றத்தை யடுத்து முத்தூர்க்கூற்றம் சொல்லப்பட்டிருக்கிறது. இக்கூற்றம் இராமநாதபுர சமஸ்தானத்தின் வடக்கில் ஒருபாகத்தைக் கொண்டிருந்ததென்றும், "உலகளந்தசோழநல்லூர்" என்ற பிரதிநாமத்தையுடைய கப்பலூர், அஞ்சுகோட்டை முதலிய ஊர்களைக் கொண்டிருந்ததென்றும் சென்னைக் கல்வெட்டு இலாகா 1909-ஆம் வருஷத்து 59-ஆம் கல்வெட்டினாலும் 1907-ஆம் வருஷத்து 408-ஆம் கல்வெட்டினாலும் அறிகிறோம். அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரம் காடுகாண் காதையுரையில்ஆதியிற் சோழநாட்டைச்சேர்ந்திருந்து பிறகு பாண்டியநாட்டின் பாகம ஆயிற்று என்றுகூறும் முத்தூர்க்கூற்றம் இப்பிரிவுதானென்று கொள்ளலாம். கானை|என்பது புறநானூற்று 21-ஆம்பாட்டிற்கூறப்பெற்ற கானப்பேராம். தேவாரத்தைப்பார்க்க. கானைக்கூற்றமென்பது புறநானூற்றுவிசேடக்குறிப்பின் 3-ஆம் பக்கத்திற்கூறியுள்ள திருக்கானப்பேர்க்கூற்றம். இது காளையார்கோவிலை உட்கொண்டபாகம். மிழலையும் கானையும் சிதலங்களாகையால் திருமிழலைக் கூற்றமென்றும் திருக்கானைககூற்றமென்றுங் கூறப்பட்டன. இளையான்குடியென்பது இராமநாதபுரத்தைச்சேர்ந்த இளையான்குடிநாடாக இருக்கலாம். அரும்பூர்க்கூற்றம், கொடுமுளூர்க்கூற்றம், தொகுவூர்க்கூற்றம் ஆகிய கூற்றங்களுள் ஒன்று, கானநாட்டார்க்கும் கோனாட்டார்க்கும் நேர்ந்த சச்சரவுகளை விளக்கும் சாசனங்களில் அடிக்கடிகூறப்படும் அதரிக்கூற்றமாகவேண்டும்.

*திருப்பெருந்துறைப்புராணம் பெருந்துறை விசேடப்படலம்17-ஆம் பாட்டினின்றும், மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலம் 6-ஆம் பாட்டினின்றும் இவ்வூருக்குப் பவித்திரமாணிக்க(புர)ம் என் றொருபெயர் இருந்ததென்று நன்குக விளங்குகிறது. இவ்வூரிலுள்ள ஸ்வாமி (திரிமூர்த்தி) தேசிகர், (ஜகத்)குரு என்ற நாமங்களைப்பெறவே "குறும்பர்நாடு" என்றது "குருதேசிகனுடு"ஆயிற்று. "குறும்பர்நாடு" என்றபெயரால், ஆவுடையார்கோவில் இருக்குமிடமானது, ஆதியிற் குறும்பவேளாளர் என்ற ஒரு காராளர்வகுப்பினரைச்சேர்ந்ததென்று அறியலாம். ஒரு "எழுதரும்புகழான்" திருப்பெருந்துறைப்புராணத்திற்கூறிய விதம், "கங்கைசூழ்காசிநின்றும்" வரவழைக்கப்பட்டிருந்த அந்தணர்களுக்கு அந்நிலத்தின் ஒருபாகத்தை அளித்தான் என்றும், பிறகு குறும்பர்கள் தங்கள் நிலத்தை இவர்களிடத்திருந்து அடையமுயற்சிசெய்து பாண்டியன்முன் இந்நிலம்,

"... ..மன்னவாமறையோரென்பார்

முன்றமதென்பாராயின்முயலுக்குக்கோடுண்டென்று" பெரு. படலம், 67. வாதித்துப் "பன்னிரண்டுஆள்பரிசம்" வெட்டினாலும் நீர் ஊறுது என்று அவர்கள்நிலத்திற்கு அடையாளம் கூறினரென்றும், ஆவுடையார் பிராமணர் பக்கம் வழக்குரைத்து|வெட்டியவுடன்,

"தடையறவே நீரூற்றந் தங்காமல் வந்துவிடும்"

என்று சாதித்து,

... LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.


எல்லையாக உப்பாறு என்பதனையும், பாம்பாற்றின் முகத்துவாரத்தி லுள்ள திருப்புனவாயிலின்பக்கத்திலிருக்கும் சுந்தரபாண்டிய பட்டினத்தைக்குறிக்குமோ என்று எண்ணக்கூடிய "நாங்கள் பாண்டியபட்டினம்" என்பதையும் மற்ற எல்லைகளுடன்சேர்த்திருப் பது* அத்தலத்தின் ஸ்வாமிபெயர்களாகிய தக்ஷிணகைலாசநாதர், திரிமூர்த்திதேசிகர், ஜகத்குரு என்பவற்றுடன் கவனிக்கத்தக்கது.

VII. (1) திருப்பெருந்துறையைக் கடற்கரையூராகக் கவிகள் வர்ணித்திருப்பது அவ்வூரைக்கொண்ட மிழலைநாட்டைப்பற்றியே. முந்நீரையடுத்தது மிழலையென்பது புறநானூற்று 24-ஆம் பாட்டால் "வெள்ளிடைமலைபோல்" விளங்குகிறது. ஆளுடையார்கோவிலுக் குத் தென்கிழக்கிற் பன்னிரண்டுமைல்தூரத்திலுள்ளதும் மிழலைச் சதகம் 41-ஆம்பாட்டில் மிழலைநாட்டிலிருந்ததாகக்கூறப்பெற்றது மான திருப்புனவாயில், கடற்கரையை ஒட்டியது. எவ்விதம் இந் நாட்டிற்குக் கீழெல்லை "உப்பாறு" என்று தேர்க்காட்டூர் ஓலைச் சுவடியிலெழுதப்பட்டிருக்கிறதோ அவ்விதமே ஞானசம்பந்தசுவாமி களும், சுந்தரமூர்த்திசுவாமிகளும் புனவாயிலைப்பற்றிப் பின்வரு மாறு கூறியிருக்கிறார்கள்.

---

"கங்கை தனையழைத்துக் கீழாறுய்வாருமென்று"
கட்டளையிட்டு, இதைப் பரிசோதிக்கவந்தமன்னர்முன்,
"அப்படியே யாங்குவெட்டி யாழமட்டுங் காணுமுன்னே
கங்கைபொங் கிக்குதித்துக் கீழாறு யோட"
நீரூற்றங்காட்டினரென்றும், அதனால்,
"கல்வெட்டி நாட்டினார் காராள ரெல்லையிலே;
வேதியர்க ளெல்லை விதவிதமாய்க் கல்நாட்டி
அந்தணர்க்குக் காணி யறுதியிட்டார் வந்தமன்னர்;
குறும்ப ரனைவோருங் கூடி விசாரமிட்டு
அந்தணர்க்குக் காணி யறுதியிட்டோ மென்றுசொல்லி
ஊர்குடியும் விட்டு ஒதுங்கினார் தென்திசையில்"
(ஆவுடையார் வழக்குரைத்த அம்மானை) என்றும் அறிகிறோம்.

மேற்கண்டவிஷயம், "விழுப்பமுள்ளசூத்திரர்வாழ்மிழலைநாடு" என்று இ நாட்டைத் திருவாலவாயுடையார்திருவிளையாடற்புராணத்திற்கூறியிருப்பதனா லும் விளங்கும்.

* இப்புத்தகத்தில் ஔவைபாட்டென்றுகூறப்பெற்ற எல்லைப்பாட்டு கள் பல உள. அவை எனக்கு விளங்கவில்லை. திறமையுள்ளவர் ஒருவர் இ புத்தகத்தைப்பரிசோதித்துப் பிழையற ஒரு காளுட்டுப்படத்துடன் அச்சிடுவி, தல் பழையசரித்திரசர்ச்சைகளில் முயற்சிப்பவர்களுக்கு அதிக உபயோகமுள்ள காரியமாகும். குறும்பர்நாட்டின் கீழெல்லை பின்வருமாறு இவ்வோலைச்சுவ யில் எழுதப்பட்டிருக்கிறது.

"மாணிக்கவாசகனையினுப திருவிளையாட்டமபெருநதுறை கைலாசநாதர கு( தேசிகனடு. ஆதிஆவுடையாருககும முநதினதலம திருவடி திருமாணிககா ஓரா ஆவுடையாா எலலை.

“ நரல்சுரி சங்கொடு மிப்பியுந் திங்கல மல்கிய
போநகடல் வெண்டிரை வந்தெறி யும்புனவாயிலே” மூன்றாந்திருமுறை.

“ கற்குன்றுந் தூறுங் கடுவெளி யுங்கடற் கானல்வாய்ப்
புற்சென்று தோன்றிடு மெம்பெரு மான்புன வாயிலே” ஏழாந்திருமுறை.

மிழலைநாடு சமுத்திரக்கரையை, அடுத்திருந்தது என்பது *மிழலைச்சதகத்தினின்றும் விபக்தமாகத் தெரிகிறது. அங்கு வசித்து வந்த காராளவேளாளர்களுக்குட்பட்ட நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு இச்சதகத்திற் கூறப்பட்டிருக்கின்றன.

“கேளும் புகழிரும் பாபுரி மேலெல்லை கீழெல்லைநீர்
நீளுங் கடலந்தப் பாம்பாறு தெற்கெல்லை நேர்வடபா
லாளும் புவியெல்லை தானம் புலிநதி யாய்விளங்கும்
வேளும் புகழெழிற் காராளர் வாழு மிழலையிலே”

இப்பாட்டில் இரும்பாபுரியென்பது மேலேகூறப்பட்ட இரும்பாநாடாம். அம்புலியாறு சுலோசனுபாய்சத்திரத்திற்கருகில் சமுத்திரத்திற்கலக்கும் புதுக்கோட்டைச்சீமையாறு. பாம்பாற்றிற்கும் அம்புலியாற்றிற்கும் இடையில் உள்ள வெள்ளாறு,

...... ..... ..... “செழும்பூந் தரங்கச் சவேதமெனும்
நதிவந் துலாவிய நாட்டார் மிழலை நராதிபரே ”

என்ற அடிகளிற் கூறப்பெற்றது.

(2) இதுநிற்க, “பெருந்துறை” என்பதை “முசிரிபோன்ற பெரியதுறைமுகப்பட்டினம்” என்றெண்ணி இக்காலத்தாருட் சிலர் ஏன் இடர்ப்படுகிறார்கள் ? பலகாலத்திற்குமுன்னெழுதப்பெற்ற ஹாலாஸ்யமாஹாத்மியத்தில் திருப்பெருந்துறையை “ஸ்ரீமகாதீர்த்தம்” என்றன்றோ கூறியிருக்கிறது. திருப்பெருந்துறையைக் கடற்றுறைப்பட்டினமென்று இந்நூலாசிரியர் எண்ணியிருந்தால் “கடற்றுறை” என்றபொருளைக்கொண்ட தகுந்தவடமொழிப்பதத்தை உபயோகித்திரார்? தமிழ்நூலாகிய திருப்பெருந்துறைப்புராணத்திலும்,

நலலதபபா ஆவுடையார குறுமபூரஎலலை நெரகிளககு உபபாறு கொரைகரை ஆறெருடிநாஙகணபாணடியபடடணம தெனனஙகுடி மாஹூரகரை விசிறி ஒடை நாகபபாகுளநதபுரவுநடு திலலைமெடுநாடடுகலலெ”

* இச்சதகத்தை அன்புடன் உதவியவர் மிழலைச்சதகத்தை யியற்றிய சர்க்கரைப்புலவர்மரபிலுதித்தவரும் மன்னார்குடிப் பிண்டிலேகாலேஜ் தலைமைத்தமிழ்ப்பண்டிதருமாகிய சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள்.

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41


"ஒழிதரான் வெட்டுந் தோறு முறுபுனல் பெருகி யெங்கும்
வழிதரப் பரவ லாலே பெருந்துறை யெனும்பேர் வாய்ந்தது" என்றும்,

"இறைவன் முன்ன மெதிர்வழக் காடி வெட்டு*
நிலவடு வகத்தி னின்று நீரெழு நீர்மை தன்னால்
பெருந்துறை யென்றோர் நாமம் பெற்றது"

என்றும் கூறப்பட்டிருக்கிறது. முன்காட்டியபடி ஆவுடையார் வழக்குரைத்து வெட்டியவுடன் நீர்ப்பெருக்கைக்காட்டியகாரணத்தினா லன்றோ "திருப்பெருந்துறை" என்றபெயரை இத்தலம் அடைந்தது!

எனக்குத்தெரிந்தமட்டில் மாணிக்கவாசகர் அடைந்தகடற்றுறை பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற்புராணத்திற்கூறியுள்ளகடற்றுறை தான்; அதாவது: அவர், சிவபெருமானது "கருணை வெள்ளப் பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார்."† .

(3) மாணிக்கவாசகர் மதுரையைவிட்டுப்புறப்பட்டபொழுது பெருந்துறையைநினைத்துப்புறப்பட்டவர் ஆகார். பலகாலமாய்த் துறைமுகங்களாகவழங்கிவரும் தொண்டி, நாகபட்டினம் முதலிய துறைகளிற் குதிரைகள் இறங்கிவரும் வழக்கத்தையறிந்து கீழ்சமுத்திரக்கரையைநோக்கிப்புறப்பட்டார். போகும் மார்க்கத்தில் திருப் பெருந்துறையைநெருங்குகையில்,

"திருந்துமுற் றவத்தி னாலே செல்வமே லாசை விட்டுப்
பரந்தநெஞ் சொடுங்கக் கண்டு பன்முறை யதிச யித்திப்
பெரும்பதி யடையா முன்ன ரடைந்தது பேரன் பென்னை
பொருந்திய தலங்க டம்முட் டலமிது போலொன் றின்றே"‡

என்று அதிசயித்து அவ்வூரில் மயங்கி நின்றுவிட்டார். ஆளுடையார்கோவிற்பெண்குழந்தைகள் பாடிவரும் கும்மிப்பாட்டொன்றில்

---

* பெருந்துறைப்படலம், 78. மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலம், 2–3. இவ்விதம் வெட்டப்பட்டுக் கங்கைநிறைந்துநின்றதடாகம் திருவெம்பாவையில் "மெய்யார்(பெருமைநிறைந்த)தடம்பொய்கை" என்றும், வடமொழி ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் "ஸ்ரீமத்தடாகம்" என்றும் கூறியிருக்கும் தீர்த்தமாக இருக்கலாம்.

† 68-ஆம் படலம் 29-ஆம் பாட்டு.

‡ வேம்பத்தூரார்திருவிளையாடற்புராணம், 27-ஆம் திருவிளையாடல் 40-ஆம் பாட்டு.

"பாதையி ருப்பத றியாமல் —திகைப் *
பூடுமி தித்தவர் போலானார்"

என்று கூறுவதற்கேற்ப, "செயல் வேறாகி" வந்தவிஷயத்தைநினையாமல் 'மார்க்கவசத்தினால்'† அடைந்த ஊரிலேயே எப்பொழுதும் இருப்பதாகத் தீர்மானித்து,

"ஶ்ரீஹாலாஸ்யேச்வரம் த்யக்த்வா நாந்யத்ர க்ஷேத்ரம் வ்ரஜாம்யஹம்"

"மோக்ஷப்ராப்தியின்பொருட்டு இவ்வூரிலேயே இருக்கப்போகிறேன்; மற்றோரிடத்திற்குப்போகமாட்டேன்" என்று சொல்லிக்கொண்டார். இது குதிரைவாங்கும் உத்தேசமுள்ளவர்வார்த்தையாகவா தோன்றுகிறது? ஆதலால்தான் பாண்டியனிடத்தில் அவன் அமைச்சர்கள்

"பெருந்துறை யடைந்தபோதே பித்துமேற் கொண்டான்"

என்று முறையிட்டார்கள்.

(4) இவர் இவ்விடத்திற் குதிரைவாங்கவந்தவரல்லர் என்பது வேறுவிதமாகவும் வியக்தமாம். எவ்விதம் எனின், தம்முடன்வந்த மனிதர்களை மதுரைக்குத்திரும்பச்செய்தபொழுது,

"வயர்புக ழாடித் திங்களிற் குதிரை வந்திடா தாவணி மதியிற்
கரைதோறு மிறங்கு மையமோ வில்லை" (வேம்பத்தூரார்திருவிளையாடற்புராணம், 27-ஆம் திருவிளையாடல் 42-ஆம் பாட்டு.)

என்றன்றோ பாண்டியனுக்கு எழுதியனுப்பினார். பாண்டியனும் இவர் மதுரைக்குத் திரும்பியதும்,

"மறங்கடி பொருட னக்கு வாசியெவ் வளவு கொண்டீ
ரிறங்கிய துறையா டேதேது" (ஷ்டி 72-ஆம் பாட்டு.)

என்று கேட்டதும் கவனிக்கத்தக்கதே.

"பித்த னொழிந் தேனெம்பி ரானுக்கே" என்றவிதமாக நடவாமல், குதிரைவாங்கும் எண்ணத்துடன் மேற்கூறிய ஆவணி மதியில் "கரைதோறும்" போய்ச் சுந்தரபாண்டியவளநாட்டிலுள்ள

---

* திகைப்பூடு என்பது அரணையென்ற வெழுந்துவாம். அதை மிதித்தவர்களுக்குத் திகைப்பு அல்லது புத்திமயக்கம் உண்டாகுமாம்.

†வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்தின் 64-ஆம் அத்தியாயத்தின் 43-ஆம் சுலோகத்தையும் 47-ஆம் சுலோகத்தையும் பார்க்க.

"தென்னன்பெருந்துறை"யைக்கொண்ட பாண்டிநாட்டுத் தொண்டி போன்ற துறைமுகப்பட்டினங்களில் வேண்டிய அளவு குதிரைகள் கிடைக்காமல் இவர் இடைஞ்சற்பட்டிருந்தால் நாகபட்டினம், தோ புத்துறைபோன்ற சோழநாட்டுத்துறைமுகங்களுக்கும்* போயிரு பார். விஷயம் வேறாகவன்றோமுடிந்தது. இவர் வந்தகாரியத்தை மறக்க, மிழலைநாட்டுநரிகள் பரியாயின!

VIII. இருநூற்றைம்பதுவருஷத்திற்குமுன்னுள்ளகாலத்தை மிகவும்பழையகாலமென்று சொல்லக்கூடாது. ஆயினும் அ காலத்திற் பெருந்துறையை ஆவுடையார்கோவிலென்றுகொண டிருந்தார்கள் என்று வியக்தமாகத்தெரிகிறது. பதினேழாம்நூ ற்றாண்டிற் பிரபலமாகவாழ்ந்த திருமலைச்சேதுபதியின் ஒருசாசன தின் பின்கண்டபாகத்தைப்பார்க்க.

"ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாஹனசகாப்தம் ஆயிரத்தைந்நூற்று எ பத்திரண்டுக்குமேல் செல்லாநின்ற சார்வரிநாமஸம்வஸ்ரத்து.... காலத்தில் திருப்பெருந்துறையில் ஆவுடைய பரமசுவாமியாருக் உஷத்காலபூஜைக்கு ஸ்ரீ திருமலைசேதுபதிபுண்ணியமாக தானசாஸ பட்டையம் கொடுத்தபடி."

IX. ஆளுடையார்கோவில் என்ற ஊர் வடக்கூர் தெற்கூ என்ற இருபாகங்களாகப் பிரிந்திருக்கிறதென்றும், ஆத்மநாதர்கோ வில் தெற்கூரில் இருக்கிறதென்றும், வடக்கூரிலுள்ளகோவில்†அர்த் மண்டபத்தில் ஒரு சிலாசாசனம் காணப்படுகிறதென்றும், அக்க வெட்டின் சிலபாகங்கள் பின்கண்டபடி என்றும் தெரியவருகிறது

---

* கடல்கொண்டழிந்துபோன காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்வத உத்தேசித்திரார். மணிமேகலை 25-ம் காதையைப்பார்க்க. ஞானசம்பந்தசுவா கள் நாகபட்டினத்தை,

"வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடலுகை"

என்று கூறியிருக்கிறார்.

† இவ்விஷயத்தைப்பற்றி என் நண்பர் பட்டுக்கோட்டைவக்கீல் மகா-ஙா- வெங்கடேசுவர ஐயரவர்கள் அன்புடன் எழுதியனுப்பியிருக்கிறார்கள். மற் பாகங்கள் அச்சுக்கோர்த்தானபிறகே இவ்விஷயம் எனக்குத்தெரியவந்தபடிய இதை எவ்விடத்தில் அச்சிடவேண்டுமோ அவ்விடத்திற் சேர்க்கக்கூடவில்

"..........திருப்பெருந்துறையான பவித்ர மாணிக்கசதுர்வேதி மங்கலத்து.........திரிபுவனவீரதேவர்க்கு யாண்டு எழு(முப்)பத்தி நாலாவது.........கல்லிலும் செம்பிலும்வெட்டிக்கொள்க"

இக்கல்வெட்டினால் திரிபுவனவீரதேவர்காலத்தில் ஆளுடையார்கோவிலையே திருப்பெருந்துறைஸ்தலமாக எண்ணியிருந்தார்கள் என்று விளங்கும். இத்தலத்திற்குப் பவித்திரமாணிக்கபுரம் என்று வேறொருபெயர் இருந்ததென்று திருப்பெருந்துறைப்புராணம் "மூர்த்திநாமவிசேடமுரைத்தபடலத்தினின்று அறியலாம்.

திரிபுவனவீரதேவர் யாரென்றும் அவர் காலம் எது என்றும் விசாரிக்கலாம். இப்பெயரைக்கொண்ட சோழவம்சத்து அரசர் இருவர் இருந்தார்கள். அவர்களுள் ஒருவர் (மூன்றாம்) குலோத்துங்கசோழன் என்ற பெயரைத் தரித்துக கோவில்கட்டுவதில் அதிக கீர்த்தியடைந்தவர். சிதம்பரத்திலுள்ள நடராஜர்கோவிலையும், கச்சியிலுள்ள ஏகாம்பரநாதர்கோவிலையும், மதுரையிலுள்ள சுந்தரேசுவரர் கோவிலையும், திருவிடைமருதூரிலுள்ள மகாலிங்கேசுவரர்கோவிலையும், கும்பகோணத்திற்கு ஒருமைலுக்கு மேற்கேயிருக்கும் தாராசுரத்தி*லுள்ள ஐராவதேசுவரர்கோவிலையும், கும்பகோணத்திற்கு மூன்றுமைலுக்குக் கிழக்கிலுள்ள திரிபுவனம் கம்பஹரேசுவரர்கோயிலையும், திருவாரூரிலுள்ள தியாகராஜஸ்வாமிகோயிலையும் இவர் கட்டினார், அல்லது புதுப்பித்தாரென்று தெரியவருகிறது. இவர் சிலாசாசனங்கள் அநேகமாய் மேற்கண்டகோவில்களிற் காணப்படுகின்றன. ஆதலால் இச்சோழராஜன்காலத்திலேயே மேற்கண்ட திருப்பெருந்துறைச் சிலாசாசனம் வெட்டப்பட்டதென்று எண்ணலாம். இவர் கி. பி. 1178-ஆம்வருஷம்முதல் கி. பி. 1216-ஆம்வருஷம் வரை அரசராக இருந்தார். ஆகையால் ஆளுடையார்கோவிலை எழுநூறுவருஷங்களுக்குக் குறையாமல், திருப்பெருந்துறையென்று எண்ணிவந்திருக்கிறார்கள் என்பது வியக்தம் திரிபுவனவீரதேவர் என்பவர் இவரல்லர்; 1331 அல்லது 1332-ஆம்வருஷத்தில் அரசரான சோழராஜனென்றுகொண்டாலும்; ஐஞ்ஞூற்றைம்பதுவருஷங்களாகத் தமிழ்நாட்டு ஆளுடையார்கோவிலையே திருப்பெருந்துறைஸ்தலமென்று வியவகரித்துவந்திருக்கிறார்களென் றறியலாம்

* ராஜராஜேசுவரம் என்பது ராராசுரம் ஆகி, தாராசுரம் என்று மாறியதாம்.

X. தமிழில் நான்குபுராணங்கள் திருப்பெருந்துறையைப்பற்றி இருக்கின்றனவென்றும், இந்நான்குபுராணங்களும் தமிழ்நாட்டு ஆவுடையார்கோவில்சம்பந்தமாகவே இயற்றப்பெற்றிருக்கின்றன வென்றும் மஹாமஹோபாத்தியாயராகிய பிரும்மஸ்ரீ சாமிநாதையரவர்கள் பதிப்பித்திருக்கும் திருப்பெருந்துறைப்புராணத்தின்முகவுரையினின்று அறிகிறோம். இவை முறையே சுமார் முந்நூறு வருஷங்களுக்குமுன்னும், (கி. பி. 1628-ஆம்வருஷத்தில்) நூற்றைம்பதுவருஷங்களுக்குமுன்னும், (தஞ்சாவூர்த் துளஜேந்திரமகாராஜா அவர்கள்நாளில்) நூற்றிருபதுவருஷங்களுக்குமுன்னும், ஐம்பது அல்லது அறுபதுவருஷங்களுக்குமுன்னும் எழுதப்பட்டனவாகும். இதனால் வடமொழி ஹாலாஸ்யமாஹாத்மியமும், வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணமும் எழுதப்பட்ட அக்காலத் தபிப்பிராயத்தையே பிற்காலத்தார்கொண்டிருந்தார்கள் என்று நன்குவிளங்கும். திருப்பெருந்துறை மேலைச்சமுத்திரக்கரையிலுள்ளதோ என்று மயங்குகிறவர்கள் இக்காலத்தாருட் சிலரே என்று எண்ணுகிறேன்.

சகல நடவடிக்கைகளும் பலநூற்றாண்டிற்குமுன் தில்லைநம்பி எழுதியபடியே இன்றும் ஆவுடையார்கோவிலில் நடந்துவருகின்றன. அவ்வூர் உத்ஸவங்கள் மாணிக்கவாசகரைச் சார்ந்தனவே. குருந்தமரம், பள்ளிக்கூடம்பிள்ளையார் முதலியவற்றைப்பற்றிப் பரக்க மகாமகோபாத்தியாயர் பிரும்மஸ்ரீ சாமிநாதையரவர்கள் மிகுந்த சிரமத்துடன் ஆராய்ந்தெழுதியிருக்கும் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்களது திருப்பெருந்துறைப்புராணப்பதிப்பின்முகவுரையைப்பார்க்க.

இத்துடன் நான் நிறுத்திவிடலாம். ஆயினும், மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள்கண்டிருக்கும் ஆக்ஷேபங்களுக்குக் கொஞ்சம் சமாதானம் கூறுவதே தகுதி.

I. திருப்பெருந்துறை "தெங்குதிரள்சோலைகளாற் சூழப் பட்டது. அது பலவும் பைங்கமுகும் செழித்துவளருமிடம்" என்பது ஒரு ஆக்ஷேபம்.

இவ்விதமரங்கள் மலையாளத்தைச்சேராதநாடுகளிலும் உண்டு. புதுக்கோட்டைச்சந்தையில் விற்பனைக்குவரும் தென்னங்கீற்றுக்களும் தேங்காய்களும் பெரும்பாலும் ஆவுடையார்கோவிற்பக்கத்திலுள்ளமரங்களினின்று அடையப்பெற்று அரண்தாங்கிவண்டிகளில்

வருகின்றன. பலாமரங்கள் மதுரையினின்று தஞ்சாவூருக்குப போகும் ரஸ்தாவிற்குக் கீழ்ப்பாகங்களில் ஏராளமாயுண்டு.

2. "குருந்தமரமும், மலைநாட்டுமரமாகக் காணப்படுகிறது" என்பது வேறு ஒரு ஆக்ஷேபம்.

யாரிடத்தில் இதை மகா-ா-ா-ஸ்ரீ சேஷையரவர்கள்கேட்டறி தார்கள் என்பது விளங்கவில்லை. இப்பொழுது புதுக்கோட்டை சீமையிலுள்ளகாடுகள் ஆதிகாலத்திலிருந்தகாடுகளில் நூற்றில் ஒ பங்காகும். புதுக்கோட்டைக்குக்கிழக்கில் மலையின்பெயரேகிடை யாது. அம்புக்கோவிலிலுள்ள ஒரு பிரபுவைப்பற்றி "அநுராகமாலை எழுத ஆரம்பித்த ஒருகவி அவருக்குத் தசாங்கங்கூறக்கருதி அ பக்கத்தில் மலை ஒன்றும் இல்லாதபடியாலும், புதுக்கோட்டைக் மேற்குப்பக்கங்களிலுள்ளமலைகளைக்கூறினால் வியவகாரத்திற் இடம் உண்டாகுமென்றுநினைத்தும், கொல்லிமலையை அப்பிரபுவி னதுமலையாகக் கூறியிருக்கிறார். ஆயினும் புதுக்கோட்டைக்குக் கீ திக்கிலுள்ள குருந்தங்காடுகளில் வேண்டிய குருந்தமரங்கள் இ பொழுதும் அகப்படும். அம்மரத்தின் எண்ணெய், இப்பாகங்களி "ஐயெண்ணெய்த்தைலம்" என்ற ஒரு மருந்தெண்ணெய்செய்வதி சேர்க்கப்பட்டுவருவதுடன் ஏழைகளுக்கு விளக்கு எரிப்பதற்கு உபயோகப்படுகின்றது. தைலாம்சமுள்ள இம்மரத்தின்பாகங்க தாமே எரியுமாதலால் தீவர்த்திக்குச்சமானமாக இவ்விராஜ்யத்தி உபயோகிக்கப்பட்டுவரும் எண்ணெய்வேண்டாத "சுழுந்து" இ மரத்தின்குச்சிகள் அல்லது உசிலங்குச்சிகளாம்.

3. அச்சனன், கின்னலேபோன்ற மலையாளத்தில் இப்பொழு வழங்கிவரும் சிலசொற்கள், திருவாசகத்தில் உபயோகிக்கப்பட் வந்திருக்கின்றன என்பது மற்றொரு ஆக்ஷேபம்.

இவர் பாண்டியதேசத்து முக்கியமந்திரியாயிருந்தபோது அ மண்டலத்தைச்சேர்ந்த மலையாளதேசத்தினின்றுகிடைத்திருக்கு ஓலைகள் ("ரிபோர்ட்டுக்கள்") முதலியவற்றைவாசித்து அத்தேசத் மொழிகளை அறிந்தார் என்றுசொல்வது தவறாமோ? அல்ல நேரில் விஷயங்களை அறிந்துகொள்ள, பாண்டியநாட்டுச் சுற்று பிரயாணஞ்செய்யுஞ்சமயமொன்றில் மலையாளத்திற் சிலகாலந்தங் யிருந்து அப்போது சிலமலையாளவார்த்தைகளையறிந்தார் என்

சொல்லக்கூடாதோ? இது நிற்க. மகா-ள-ள-ஸ்ரீ சேஷையாவ
எடுத்தெழுதியமொழிகள், மதுரைப்பக்கத்தில் மாணிக்கவாசகசு
தள்காலத்தில் உபயோகத்திலில்லையென்று தைரியமாகக்கூறு
களா? இவர்கள் எழுதியிருப்பதைவாசிப்பவர்கள் அக்காலத்தில்
யாளத்தில் வழங்கிவந்தபாஷை தமிழினின்றும் வேறு என்று நிச்
கும்படியிருக்கிறது. மலையாளம் என்னும்பாஷை தனியாக
பொழுது இருந்ததா? மகா-ள-ள-ஸ்ரீ சேஷையாவர்கள் ஸ்தாபி
விரும்பும் மாணிக்கவாசகர்காலத்திற்கு 500-வருஷத்திற்குப்பின்த
மலையாளபாஷை உண்டாக ஆரம்பித்தது என்பது அநேகர் அ
பிராயம். பதின்மூன்றுநூற்றுண்டிலியற்றப்பட்ட இராமசரிதந்த
இப்பாஷையின் ஆதிகாவியம் என்றும், திருவாதவூரர்காலத்தி
ஆயிரம்வருஷத்திற்குப்பின் எழுதப்பட்ட இக்காவியம் மலையாளத்தை
விடத் தமிழையே அதிகமாக ஒத்திருக்கிறதென்றும் மகா-ள-ள-
நாகமையர் என்பவர் கூறியிருக்கிறார்.*

"யானுமோர் பேயனே யெவர்க்கும்†"

என்றுதோன்றும்படி நிஷ்டையிலிருந்தகாலத்தில், மலையாளத்திற்
வெளியில் அக்காலத்தில் உபயோகத்திலில்லையென்று மகா-ள-ள-
சேஷையாவர்கள்கூறும் சிலமொழிகளைக்கற்றுக்கொண்டு அவற்றை
விட்டுவிட மனம்வராமல் திருவாதபுரீசுவரர் தம்முடை
திருவாசகத்திற் சேர்த்துவிட்டார்" என்று கூறியிருப்பது நியா
மாகுமா? பழையநூல்களிலுள்ள அநேகமொழிகள் இந்நாட்டி

---

* திருவாங்கோடுவிருத்தாந்தம் இரண்டாஞ்சம்புடத்தைப்பார்க்க.

† பெருமாள்திருமொழி, 3, 8. இப்பெருமாள் மலையாள தேச
தரசர்களுள் ஒருவர். இவர் கி. பி. எட்டாம்நூற்றுண்டில் இருந்திருக்கலா
இவர் அக்காலத்திலில்லாத மலையாளபாஷையில் எழுதாமல் வடமொழியிலு
தமிழிலும் எழுதித் தம்முடையதமிழை 'இன்தமிழ்' 'நற்றமிழ்' என்று கூறியிரு
கிறார். இவருக்கு நூறுவருஷத்துக்குப்பின் இருந்திருக்கலாம் என்று எண்ண
கூடிய சேரமான்பெருமாணயனாரும் குலசேகரப்பெருமாளைப்போல் மலையாள
தேசத்தரசராவர். இவருககுத் "திருவாலவாயின்மன்னியசிவன்" தம்முடை
திருமுகப்பாசுரத்தை மலையாளத்தில் எழுதாமல் தமிழில் எழுதியனுப்பினா
சேரமான்பெருமாணயனாரும் தம்முடையபிரபந்தங்களைத் தமிழிலேயே எழு
யிருப்பதன்றி, தம்முடைய "திரு ஆதியுலா"வில் தமிழ்ப்பாஷையை "ஒள்ளியதீ
தமிழின் றெய்வவடிவாள்" என்று மேலாகப் பாராட்டிப் பேசியிருப்பதுட
மலையாளமறியாத தமிழனைப்போல் "மடல் வண்ணம்" "எழிலுடையவெண்பா
"இருந்தமிழ்" என்று ஒருவகைப்பிரயத்தனமுமில்லாமல் எழுதியிருக்கிறார்.

மறைந்துபோய் இன்னமும் மலையாளத்தில் வழங்கிவருகின்றன* இவ்விதம் ஆங்கிலதேசத்தில் இப்பொழுது மறைபட்டிருக்கும் பல மொழிகள் அத்தேசத்தைவிட்டு கி. பி. 17-ம் நூற்றாண்டில் அமேரிக்காவுக்குப்போனவர்களின்சந்ததியாரால் இன்றும் வழங்கப்பட்டு வருவது பிரசித்தம்.

4. "வைக்கத்திற்கு வாதபுரீசுவரம் என்றபெயர் வழங்குகிறதென்பதும், அந்தக்ஷேத்திரத்துமூர்த்தியின் திருநாமம் பெருந்துறைக்கோவிலப்பனென்பதும், அங்குச் சிவன் ஞானாசிரியனாகத்தோன்றி உபதேசஞ்செய்ததைக் காட்டும் திருவிழா நடந்துவருகிறதென்பதும் மற்றொரு ஆக்ஷேபமாம்.

மேற்கண்டவிதம் பெயர்களிருந்து திருவிழாநடந்துவருவதிற் பிரத்தியவாயம் என்ன? மேல்நாட்டுத் திருக்கோகர்ணத்திற்கு எதிராக ஏழாம்நூற்றாண்டுமுதற் பிரசித்திபெற்று, மாறன்சடையனைச் சேர்ந்த கல்வெட்டுடன்விளங்கும் திருக்கோகர்ணேசர்கோவில் புதுக்கோட்டையைச் சார்ந்திருக்கிறது. இது ஆதித்திருக்கோகர்ணம் ஆகிவிடுமா? இவ்விதமே ஜெம்புகேசுவரம் கடம்பவனம் என்ற ஸ்தலங்கள் பெயர்பெற்று அநேகநூற்றாண்டுகளுக்குமுன் இச்சீமை நார்த்தாமலையில்விளங்கிவந்தன. அகத்தியருக்குத் திருக்கல்லியாணக்காட்சி பரம்சிவன் அளித்ததாக விழாநடத்தும் ஊர்கள் பல.

மகா-ா-ா ஸ்ரீ சேஷையாவர்கள் தமக்குநேராகத் தெரிந்ததாகக் கூறுத இவ்வாக்ஷேபத்திற்கண்டவிஷயங்கள் உண்மையாயின், முக்கியமந்திரியாயிருந்த மாணிக்கவாசகர் வைக்கத்திற்கு ஒருபெரிய

---

* இவ்வுரையைவற்புறுத்த என் நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ கோபாலையரவர்கள் பின்கண்ட உதாரணங்களைக் கோணப்பட்டினின்று எழுதியனுப்பியிருக்கிறார்கள்.

1. போற்றி-(போற்றிமார்) பூசைசெய்பவர். ஆசாரக்கோவை, 64-ம் செய்யுள்.

2. பூசை - பூனை. கம்பராமாயண அவையடக்கம்.

3. சூரல் - பிரம்பு. "சூரல்பம்பியசிறுகான்யாறே"

4. திரிதல் - பிரிதல். தொல்காப்பியம், சொல், சேனாவரையருரையில் 172, 222.

5. பெண்டாட்டி - பெண். ஷை ஷை. ஷை. 163.

6. பூழி, புழுதி. கம்பராமாயணம், யுத்தகாண்டம்.

UVANMIYUR, MADRAS LIBRARY



நன்மைசெய்திருக்கவேண்டுமென்றும், ஆதலால் அவ்வூர் மகாஜனர்கள் அம்மந்திரியின்பெயரை அவர் சுற்றுப்பிரயாணஞ்செய்து அங்கு போயிருந்தசமயத்தில் அவ்வூருக்கு இட்டிருக்கலாமென்றும், பிறகு ஆளுடையார்கோவிலில்நடந்த அற்புதவிஷயங்களைக்கேள்வியுற்று ஞானோபதேச உர்ஸவத்தை அவ்வூரில் ஏற்பாடுசெய்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது. (ஜார்ஜ்டௌண், இன்னிஸ்பேட்டைமுத லியபெயர்களைநோக்குக.)

5. குதிரைகளிறங்குவதற்கு மேலைச்சமுத்திரக்கரையே ஏற்றதாகவிருந்ததன்றி பாண்டிநாட்டுக் "குணகடற்பாலுறுதுறை"கள் அக்காலத்தில் "தாவுமா"விறங்குபட்டினங்களாகக் காணப்படவில்லை யென்பது மற்றொரு ஆக்ஷேபம்.

இவ்விதம் எழுதியிருப்பது கொஞ்சம் வேடிக்கையாயிருக்கிறது. இவர்களாக மாணிக்கவாசகருக்கு ஒருகாலத்தைக்கற்பித்துக்கொண்டு* புராணத்திற்கூறியபடி அக்காலத்திற் கீழ்சமுத்திரக்கரையில் குதிரையிறங்குவதற்கான துறைமுகங்கள் இருந்தன என்று சொல்லக்கூடாதாகையாற் புராணத்திற்கூறியவிஷயம் தவறு என்று ஆக்ஷேபிக்கிறார். எனக்குத்தோன்றியவரை சோழநாடு பாண்டியநாடுகளுக்குத்தேவையானகுதிரைகள் மேலைச்சமுத்திரக்கரையிலிறங்கிப் புலிகளுக்கிறையாகும்படி "கடமும் வெற்பும்" கடந்துவந்திரா. முற்காலத்திற் கீழ்சமுத்திரக்கரையில் வேண்டிய துறைமுகங்கள் இருந்திருத்தல்வேண்டுமென்பது பழையநூல்களால் விளங்குகிறது. மாணிக்கவாசகர்காலமென்று குறிக்கப்பட்டிருக்கும் கி. பி. மூன்றும்நூற்றாண்டிற்குமுன் 700-வருஷகாலமாக இலங்கைத்தீவிற்கும் பாண்டிய சோழ அரசர்களுக்கும் சம்பந்தம் இருந்துவந்தவிஷயத்தை இலங்கைச்சரித்திரங்களாகிய மகாவம்சம், இராஜாவளி, இராஜரத்நாகரம் என்றநூல்கள் கூறுகின்றன.

கி. மு. ஆறுநூற்றாண்டிலேயே அநேக பாண்டியநாட்டுப்பெண்கள் இலங்கைத்தீவிலுள்ளவர்களுக்குமாலையிட்டு அவர்களுடன்வாழ்ந்துவந்தார்களென்றும், கி. மு. மூன்றும்நூற்றாண்டில் ஏலேல

* சென்னைச் சிலாசாசன இலாகாவின் 1908-ஆம்வருஷத்திய 409-ஆம் இலக்கக்கல்வெட்டில் இவர் விக்கிரக ஆராதனத்திற்காகவும்,1906-ஆம்வருஷத்திய 165-ஆம் இலக்கக்கல்வெட்டில்(கி.பி. 1135-ஆம்வருஷத்தில்) இவர் திருச்சாழல் ஓதுவதற்காகவும் நிலங்கள்விடப்பட்டதாகக்கூறியகாலங்களை மறுக்கமுடியாது

என்ற ஒருவீரர் ஒரு பெரியபடையுடன் இலங்கைத்தீவுக்குப்போய் அத்தீவைக் கைப்பற்றிக்கொண்டார் என்றும், சோழநாட்டார்களும் பாண்டியநாட்டார்களும் அடிக்கடி தனுக்கோடிக்கெதிராகவுள்ள தலைமன்னார்ரயில்ஸ்டேஷனுக்கு அருகிலிருக்கும் மாந்தோட்டத் துறைமுகப்பட்டினத்தில் * இறங்கி அத்தீவைக் கொள்ளைகொண்டார்களென்றும், கி. பி. 110-ஆம்வருஷத்தில் ஒரு சோழராஜன்† அத்தீவுக்கு நேரேபோய் 12,000 சிங்களர்களைச் சிறைசெய்து தன் னாட்டுக்குத்திரும்பினான் என்றும், இலங்கைத்தேசத்து அரசனான கஜபாகு என்றவன், கி. பி. 113-ஆம் வருஷத்தில் யாழ்ப்பாணத்துறைமுகத்தினின்று பெரியபடையுடன்புறப்பட்டுச் சோழநாட்டைஜெயித்துச் சிறையாக்கப்பட்ட சிங்களர்களுடன் அநேக சோழநாட்டு மனிதர்களையும்பிடித்துக்கொண்டு தன்னுடைய தீவிற்குத் திரும்பினான் என்றும் அறிகிறோம்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்குப்பிற்பட்ட விஷயங்களில் இரண்டைக் குறித்துக்காட்டலாம்.

(1) புதுக்கோட்டைச்சீமையின் பழையபிரிவுகளுக்குள், ஜயசிங்ககுலகாலவளநாடு,இரட்டைப்பாடிகொண்ட சோழவளநாடு,விருதராஜபயங்கரவளநாடு என்பவற்றைப்போன்ற கடலடையாதிலங்கை கொண்ட சோழவளநாடு என்ற ஒருபிரிவு இருந்தது. இப்பெயரிலுள்ள விருதின்பொருள், "இராமனைப்போலக் கடலுக்கு (ஸேது) அணைபோடாமற் கப்பல்களில் ஏறிப்போய் இலங்கைத்தீவைத் தன் கைவசப்படுத்திக்கொண்டான், சோழன்" என்பதுதான்.

---

* அநேகதமிழர்கள் புத்தநாடான அத்தீவிலேயே ஹிந்துதேவதைகளின் கோவில்களைக்கட்டி அங்கு வசித்துவந்தார்கள் என்று இலங்கைச்சரித்திரத்தினின்று அறிகிறோம். இம்மாந்தோட்டம் சுந்தரமூர்த்திசுவாமிகளால்,

"ஈழநாட்டுமாந்தோட்டம்"

என்று திருநாட்டுத்தொகைத்தேவாரத்திற் பாராட்டப்பெற்றது.

† இச்சோழன் பட்டினப்பாலையைக்கொண்ட கரிகாற்பெருவளவன். இலங்கைத்தீவிலிருந்துவந்தவர்களைக் காவிரிப்பூம்பட்டினங்கட்டும்வேலையில் ஏற்படுத்தினான். கஜபாகு என்பவன் முதற்கயவாகு எனப்படுபவன். சிலப்பதிகாரத்தைப் பார்க்க. புதுக்கணக்கின்படி மேற்கண்டவருஷங்களை கி. பி. 166 என்றும், கி. பி. 169 என்றும் கொள்ளல்வேண்டும்.

(2) பிறகு பாண்டியர்களுக்குள் யாரைச்சேர்ந்தது பாண்டிய நாடு என்ற அவர்கள்சந்தேகத்தைத்தீர்க்க யுத்தம்நேர்ந்தசமயத்தில் இலங்காபுரதண்டநாயகர் என்ற ஒருவர் பெரியசைன்யத்துடன் இலங்கைத்தீவினின்று பாண்டிநாட்டிற்குவந்து, பொன்னவராவதியிற் குல சேகரபாண்டியனை உடுத்தஉடையுடன் போர்க்களத்தினின்று ஓட அடித்து, ஒன்பதுமைல்விஸ்தீரணம்வரை ஒரேபிணக்குவியலாகச் செய்ததுமன்றி, இராமேசுவரத்தைப் பிடித்துக் கீழ்சமுத்திரக்கரைத் தொண்டித்துறைமுகத்தை*த்தாக்கி மறுபடி இரண்டுதடவை குல சேகரபாண்டியனை அபஜயப்படுத்தியதும் பலர் அறிந்தவிஷயம்.

மேற்கண்டபடையெடுப்புக்களெல்லாம் மேலைச்சமுத்திரக்கரை மூலமாகவாநடந்தன? யானைப்படைகளையும் இலங்கைத்தீவினர் உட யோகித்துவந்தனர் என்று தெரிகிறது.† அவை இந்தியாவுக்கு வந்திராவிட்டாலும் குதிரைப்படைகள் வந்தேயிருக்கவேண்டும் தோப்புத்துறைக்கும் நாகபட்டினத்திற்கும் எதிரிலுள்ள யாழ்ப பாணத்தினின்றுபுறப்பட்டபடைகள்கூட மேலைச்சமுத்திரக்கரைத் துறைமுகங்களில் இறங்கிவந்தனவென்று மகா-ா-ா-ஸ்ரீ சேஷைய ரவர்கள் நம்மை நம்பச்சொல்லுகிறார்கள்.

"துறைமுகத்துக்குவேண்டிய சகலசாதனங்களையுமுடையது" என்றுகூறப்பட்ட முத்துப்பேட்டை‡, அதிவீராமபட்டினம், கி. பி 2-வது நூற்றாண்டிலேயே ரோமாபுரிநூலாசிரியர்களாற் குறிக்கப் பெற்றதும்,

"வங்கங்களு முயர்கூம்பொடு வணங்கும்மறைக் காடு"

என்று சுந்தரமூர்த்திசுவாமிகளாற் பாராட்டப்பெற்ற கடற் கரைப்பட்டினத்தைக்கொண்டதும், இலங்கைத்தீவினின்று 40 மைல் தூரமேயுள்ளதுமான கோடிக்கரைப்பக்கங்கள், "வங்கமலிகடல் நாகபட்டினம், காரைக்கால், மணல்மேற்குடி, "பண்டைக்காலத்தி

---

* இது பெரியதுறைமுகப்பட்டினமாக இருந்தது. சேதுபதிகளின்விருது களில் "தொண்டியங்காவலன்" என்பது ஒரு சிறந்தவிருது. இவ்விஷயம் அவ கள் கல்வெட்டுக்களினால்விளங்கும்.

† மகாவம்சம் 25-ஆம் அத்யாயத்தைப்பார்க்க.

‡ இப்பட்டணங்களிற் பலவற்றைப்பற்றி "Imperial Gazetteer of India என்ற புஸ்தகத்தைப்பார்க்க.

ஒரு பெரிதானதுறைமுகமாக இருந்த"தென்று கூறப்பெற்ற ஆளுடையார்பட்டினம், இக்காலத்திலும் கப்பல்கள்வந்துநிற்கும் அம்மாள்பட்டினம், கோட்டைப்பட்டினம்,'ஓங்கிரும் பரப்பின், வங்க் வீட்டத்துத் தொண்டியோ ரிட்ட,வகிலுங் துகிலு மாரமும் வாசமும்' என்னும் சிலப்பதிகார அடிகளிற்கூறப்பெற்றுள்ள தொண்டி, தேவி பட்டினம் "சங்கெடுப்பவர்களைக்கொண்ட" "நினைத்ததுமுடித்தான் பட்டினம்" என்னும் "புணரியோதம்பணிலமணியுந்தும்" திருப்புல் லாணிக்கடுத்த கீழைக்கரை, கொற்கையம்பெருந்துறை, தூத்துக்குடி, காயற்பட்டினம், குலசேகரபட்டினம் முதலிய துறைமுகங்களின் பாகங்கள் கடற்கரைத்துறைமுகங்களாவதற்கு ஏற்றஇடங்களென்று சோழபாண்டியர்கள் அறியாமல் வனத்தையும் வெற்பையும் பகைவர் களின்நிலத்தையுங்கடந்து மேலைச்சமுத்திரக்கரைக்கு வருந்திச் சென்று அங்குள்ள துறைமுகங்களிற் கப்பலேறி நீண்ட கப்பல் யாத்திரைகள்செய்து இலங்கைத்தீவிற்குச்சென்றார்களென்று நம்பு வது சிரமமாயிருக்கிறது.

யாவராலும் கொண்டாடப்படும் வின்ஸெண்ட் ஏ. ஸ்மித் (Mr. Vincent A. Smith) என்னும் துரையவர்கள் "கி. பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளிலே சோழமண்டலச்சமுத்திரக்கரையிலுள்ளவர்கள் தங்களுக்கு மேற்கிலுங் கிழக்கிலுமுள்ளதேசங்களுடன் சுறுசுறுப் பாய்வியாபாரஞ்செய்துவந்தார்களென்று தமிழ்நூல்களினின்றும், க்ரீக்நூலாசிரியர்களும் ரோமாபுரிநூலாசிரியர்களும் எழுதியிருப்பதி னின்றும் தெரியவருகிறதென்றும், சோழநாட்டுமரக்கலங்கள் பயந்து கொண்டு கடற்கரையோரமாகவேபோய்வந்தன என்று எண்ணக் கூடாதென்றும், துணிவுடன் ஒருவிதயோசனையுமின்றி வங்காளக் குடாக்கடலைத்தாண்டி வங்காளத்துக்கும் பர்மாவுக்கும் சோழதேசத் துக்கப்பல்கள்போய்வந்தன என்பதல்லாமல் இந்துமகாசமுத்திரத்தை யுங் கடந்து சுமாட்ரா, ஜாவா* முதலிய வெகுதூரத்திலுள்ளதீபங்களு டனும் வியாபாரஞ்செய்துவந்தன என்றும் கூறுகிறார். இந்நாட்டு

*மகா-ள-ள-ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்கள் தம்முடைய புராதன இந்தியா என்ற புஸ்தகத்தில் சீனதேசத்துடனும் சுமாட்ரா, ஜாவாமுதலியதீவுக ளுடனும்வெண்டும் வியாபாரஞ்செய்வதற்கேற்ற பெரிய வர்த்தகத்துறைமுக மாய்விளங்கியது தொண்டி என்று கூறியிருக்கிறார். மற்றப்புத்தகங்களினின்று அநேகதுறைமுகப்பட்டினங்கள் புதைபட்டுப்போய் இக்காலத்திற் கண்டுபிடிக் கப்பட்டுவருகின்றன என்றும், நாகபட்டினம் தூத்துக்குடி என்ற ஊர்கள் பழங் காலத் துறைமுகப்பட்டினங்கள் என்றும் விளங்கும்.

மாலுமிகள் கப்பலோட்டுவதில் மிகவும் திறமையுள்ளவர்களாகையால் ஆதியில் இலங்கைத்தீவின்மன்னர்கள் இவர்களையே தங்கள்மாலுமிகளாக நியமித்துக்கொண்டார்கள். இத்தேசத்துக்கப்பல்கள் இரண்டாயிரத்தெழுநூறுகன அடி* கொள்ளும்படியான பெரியமரக்கலங்களாகவிருந்தனவென்று கி. பி. முதல்நூற்றாண்டிலிருந்த ரோமாபுரி நூலாசிரியர் ஒருவர் கூறியிருக்கிறார். கீழ்கரையிலிருந்த ஆந்திர தேசத்து கி. பி. முதல்நூற்றாண்டுக்காசு ஒன்றில் இருகூம்புள்ளதும் பெரிதாகத்தோன்றுவதுமான மரக்கலம் அச்சிட்டிருப்பதைப்பார்க்கலாம். இனி யாவரும் திருப்பெருந்துறை என்னும் ஸ்தலம் தமிழ்நாட்டு ஆளுடையார்கோவில் என்றே கொள்வார்கள்† என்று நம்புகிறேன்.§

---

* சிலநூற்றாண்டுகளுக்குமுன் ஐரோப்பாவினின்று மூவாயிரம்மைல்தூரமுள்ள அமெரிக்காவுக்கு யாத்திரைசெய்ய இரண்டாயிரம் கனஅடிகொண்ட சிறுமரக்கலங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

† தஞ்சாவூரிலுள்ள சரஸ்வதிமஹால் என்னும் புத்தகசாலையிலுள்ள சிவயோகாம்பிகை பிள்ளைத்தமிழும் சிவயோகாம்பிகை திருப்பொன்னூசலும் பழையநூல்களாகவே காணப்படுகின்றன. இவற்றைக்கொண்ட கையெழுத்துச் சுவடியிற் பல இடங்களிற் பின்கண்ட வாக்கியங்களைப்போன்றபாகங்களைக் காணலாம்.

(i) "அரந்தாங்கி சூழ்நாடா வமைமிழலை நாடு" ஊசல்.

(ii) "வேதண்ட வெண்முத்து வெண்களிற் றுக்கொம்பு........"
தெள்ளுநீர்வெள்ளாறுபாய்,
திருமிழலை நாட்டுப்பெ ருந்துறை யெனப்படுஞ் சிவபுரிக் கொருசெல்...
வே...சப்பாணியே" பிள்ளைத்தமிழ்.

§ "மயர்வறமதிநலம்" அருளப்பெற்றவர்கள் என்று கொண்டாடப்படும் ஆழ்வார்கள் சிலபிரபந்தவகைகளின் இலக்கணத்தை அறியாதவர்களா யவற்றை மாணிக்கவாசகர்திருவாசகத்தினின்றும் அறிந்து, அவ்விதப்பிரபந்தங்களை யியற்றினார்களென்று மகா-ள-ள-ஸ்ரீ சேஷையரவர்கள்கூறியிருப்பது, தொல்காப்பியத்துப் புறத்திணையியலிலும் செய்யுளியலிலுமுள்ள பிரபந்தவகைகளைக் காட்டும் சூத்திரங்களையும், இசைப்பிரபந்தவகைகளை விவரிக்கும் சங்கீதரத்நாகரத்தின் பிரபந்த அத்யாயத்தையும், சிலப்பதிகாரத்தின் உரைகளையும், மற்ற ஆதாரங்களையும் வைத்துக்கொண்டு ஆராயத்தக்கது. விஷயம் தெரிந்தவர்களை இதைப்பற்றிச் செந்தமிழ்ப்பத்திரிகைக்கு எழுதப்பிரார்த்திக்கிறேன்.

# குறிப்பு.

IX-ஆம் ஆதாரமாக அச்சிட்டிருக்கும் சிலாசாசனம், ஆளுடையார்கோவில் வடக்கூர்க் கைலாசநாதர்கோவில் அர்த்தமண்டபத்தின் தூணொன்றிற் காணப்படுகிறதென்றும், அது திரிபுவனவீரதேவர்க்கு "யாண்டு முப்பத்துநாலில்" வெட்டப்பட்டதென்றும், அவ்வூர்த் தென்னந்தோப்பொன்றிலுள்ள வீற்றிருந்தபெருமாள் எனப்படும் ஆதிகேசவப்பெருமாள்கோவிலின்மதில்வெளிப்புறத்திற் பின்கண்ட வேறொருகல்வெட்டுக் காணப்படுகிறதென்றும் என் நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ வெங்கடேசுவரஐயர் அவர்கள மறுபடி எனக்குப் பட்டுக்கோட்டையினின்று எழுதியிருக்கிறார்.

"ஸகாப்த தூடாஅ மேல செலலாநினற ஸ்ரீவிருபபண உடையறகு செலலாநினற க்ஷயஸம்வதஸரதது காத்திகைநாயறறு வ-௭வ-௪வக்ஷத திதியைஉம வியாழககிழமையும பெறற ரேவதிநாள மிழலைககூறறதது நடுவிலகூறறு ப்ரஹ்மதேயம தனியூர திருப பெருநதுறையான பவித்ரமாணிகக சதுர்வேதமஙகலதது ஸபையோ (ம) யாரோம..................."

இச்சாசனம், கி. பி. 1379-ஆம்வருஷம்முதல் கி. பி. 1400-ஆம் வருஷம்வரை விஜயநகரத்தில் அரசாண்ட (இரண்டாம்) விரூபண்ண உடையார் எனப்படும் (முதல்) விரூபாக்ஷமகாராஜா அவர்கள்காலத்தில்வெட்டப்பட்டது. இச்சாசனம் ஏற்பட்டு ஐஞ்ஞூற்றுமுப்பது வருஷம் ஆகிறது. இரும்பாநாட்டைப்போல் திருப்பெருந்துறையும் மிழலைக்கூற்றத்து நடுவில்கூற்றில் அக்காலத்தில் இருந்ததென்று இச்சாசனத்தால் அறிகிறோம்.

ஆதலால் வேம்பத்தூரார் திருவிளையாடற்புராணமும், வடமொழி ஹாலாஸ்யமாஹாத்மியமும், கானநாட்டுவிருத்தாந்தமும், (நான்கு) திருப்பெருந்துறைப்புராணங்களும், சிவயோகாம்பிகைபிள்ளைத்தமிழும், சிவயோகாம்பிகைதிருப்பொன்னூசலும், மிழலைச்சதகமும் புதுக்கோட்டைச்சீமைக் கல்வெட்டுக்களும், ஆளுடையார்கோவிலிலேயே உள்ள சிலாசாசனங்களும், மேற்குறித்த விடுகதைபோன்றபழமொழியும், செப்பேட்டுச்சாசனங்களும் ஒரேவாக்காக எள்ளளவும் சந்தேகத்திற்கிடமில்லாமல் "ஸ்ரீமகாதீர்த்தம்" என்னும் திருப்பெருந்துறை, "ஜகவந்நாதஸ்வாமி"யான ஆளுடையசுவாமிவீற்றிருக்கும் ஆளுடையார்கோவிலே என்றும், மாணிக்கவாசகர் கீழ்சமுத்திரக் கரைக்குப்புறப்பட்டுப்போகும்வழியிற் சிவன்செயலாற் செயல்வேறுபட்டுக் கடற்றுறையல்லாத திருப்பெருந்துறையிலேயே வாழ்நாளைக் கழிப்பதாகத் தீர்மானித்து அங்கே தங்கிவிட்டாரென்றும் உள்ளங்கை நெல்லிக்கனிபோற்காட்டுகின்றன.

## மற்றொரு ஆதாரம்.

XI. பின்னெழுதியுள்ள சுலோகங்கள், ஸ்ரீரங்கத்திலும் அநந்தசயனத்திலும் அச்சாயிருக்கும் நீலகண்டதீக்ஷிதர் அவர்களாற் சுமார் 280-வருஷங்களுக்குமுன் இயற்றப்பெற்ற "சிவலீலார்ணவம்" அல்லது "சுந்தரேசரது திருவிளையாடற்கடல்" என்னும் புத்தகத்தினின்று எடுக்கப்பட்டிருக்கின்றன.* அவை, திருப்பெருந்துறை என்பது கீழ் சமுத்திரக்கரைக்கு 10-மைல் மேற்கேயுள்ளஸ்தலம் என்று தெளிவாய்க்காண்பிக்கின்றன.

### இருபத்தோராம் சருக்கம்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ (௩)

[illegible]
[illegible] (௪)
[illegible]
[illegible] ॥ ...

[illegible] ॥ (௬)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (க)

இ-ள். அந்தப்பாண்டிய அரசன், தன் பொருள் எல்லாவற்றினும் மேலானகுதிரைகள்வாங்கவிரும்பி அந்த வாதபுரீசரை யவ்விதம்செய்யும்படி, சோழதேசத்துச் சமுத்திரக்

---

* இவ்விஷயத்தை எனக்குத்தெரிவித்தவர், தஞ்சாவூரிலிருக்கும் என் நண்பர் மகா-ா-ா-ஸ்ரீ டி. எஸ். குப்புஸ்வாமிசாஸ்திரிகள்.

கரைக்குப்போகும்படி உத்தரவுசெய்தான். அநுமதி யடைந்த அமமந்திரி இரண்டுமூன்றுதினத்திற் சோழ* தேசத்தைக்கண்ணுற்றார். பிறகு சிலநாள் வழிப்பயணஞ் செய்து கடலுக்கு ஒருயோஜனைதூரம் (பத்துமைல்) மேற்கே யுள்ள சிவஸ்தலத்தைக்கண்டார். அம்மந்திரி மஹேஸ்வர தீக்ஷையைக் கைக்கொண்டு பாசம் அறுபட்டவராய்ச் சிறிது நேரத்திற்கெல்லாம் குதிரைகள்வாங்கக் கொண்டுவந்துள்ள பொருளைக்கொண்டு மகேசனை ஆராதித்து (அக்காரியத்தால்) தம் அரசனையுங் காப்பாற்றினார் என்பதாம்.

வேறோரு ஆதாரம்.

XII. பின் அச்சிட்டிருக்கும்பாடல்கள், கடவுள்மா முனிவராலியற்றப்பெற்ற திருவாதவூரர்புராணத்தினின்று எடுக்கப்பட்டன. அவை, மாணிக்கவாசகர் சோழதேசச் சமுத்திரக்கரையைநோக்கிக் குதிரைவாங்கப்புறப்பட்டார் என்றும், வழிதப்பிப் பெருந்துறையையடைந்தார் என்றும் காட்டுகின்றன.

(1) "நம்நகி மார்பனெ மெம்புவி சார்தரு மால்கட லின்கரை
நீதில மாதுர கங்கொடு சீர்கெழு மாரியர் வந்தனர்"

என்று பாண்டியனிடத்தில் அவன் "தூதர் விளம்பினார்."

(2) "மீனவர்கோன்" "வாவுநன் மாதுர கங்கொடு வாருமெனு......
, மொழிந்தனன்"

(3) "சென்றுதமிழ் மாறனருள் பெற்றெழில்சி றக்கும்
வென்றிவள வன்புவியின் மேன்மையொடு செல்வார்."

(4) "நெடுங்குடதி சைக்கடனி றைந்தொலிசி றந்தே
யுடைந்துதய நற்றிசையி லுற்றுவரு மாபோன்
மிடைந்தபதி யுங்கடமும் வெற்புமிவை யெல்லாங்
கடந்துபதி சென்றுபல காவதம கன்றார்"

---

* ஆளுடையார்கோவிலைச்சேர்ந்ததேசம் மாறிமாறிச் சோழர்களுக்குள்ளும் பாண்டியர்களுக்குள்ளும் இருந்துவந்தது. மாணிக்கவாசகர் காலத்தில் அத்தேசம் பாண்டியற்குட்பட்டிருந்தது. நீலகண்டதீக்ஷிதர் காலத்திலும், திருவாதவூரர்புராணமியற்றியவர்காலத்திலும் அது சோழதேசத்தின்பாகமாகவிருந்தது. திருப்பெருந்துறை கடற்கரையி லிருக்கும் திருப்புனவாயிலினின்று பன்னிரண்டுமைல்தூரத்திலுளது என்று கூறியிருக்கிறேன்.

(5) "நகர்தோறுஞ், சென்றுவழி மாறியொரு தெய்வவழி செல்வார்"*

(6) "சாற்றருந் துரகங் கொள்ள நேரியன் றலத்திற் சார்ந்து
நீற்றின னடியார் கையி னின்பொருள் யாவு மீந்தார்†"

## பதின்மூன்றுவது ஆதாரம்.

**XIII.** பரஞ்சோதிமுனிவரது திருவிளையாடற்புராணத்தின்படியும், மாணிக்கவாசகர், கீழ்சமுத்திரக்கரையை நோக்கிப்புறப்பட்டுப்போய், அத்திக்கினின்று குதிரைகளை வரவழைத்தார் என்று தெரிகிறது.

(1) சென்ற வேலையந் துறையில்வந் திறங்குவ தெரிந்து
வென்றி வாம்பரி கொடுவரப் போமென்று விடுத்தான்
(பாண்டியன்).

(2) மற்றிவர்வ ழிப்படுமுன் மாறிநட மாடும்
வெற்றிவிடை யாரிவர்வி னைத்தொகையி னொறுப்பும்
பற்றியவி ருட்டுமல பக்குவமு நோக்கா
வுற்றடிமை கொண்டுபணி கொண்டருள வுன்னு

(3) சந்தமறை தீண்டரிய தங்கருணை யாலோ
ரந்தணர் குலக்குரவ னாகியடி நீங்கா
மைந்தர்பலர் தமமொடுபெ ருந்துறையில் வந்தோர்
கொந்தலர்நெ ருங்கியகு ருந்தடியி ருந்தார்‡

(4) வாதவூரர் "கருணைவெள்ளப்
பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார்."$

(5) மிடைந்த மாயவாம் பரித்திரள் மேற்றிசை நோக்கி
நடந்த நாயக னுன்மறைப் புரவியு நாப்ப
ணடைந்த தாலெழுந் தூளிக ளண்டமுந் திசையும்
படர்ந்த போம்வழி யாதென மயங்கினன் பரிதி¶

இப்பாட்டிற் குதிரைக்கூட்டங்கள் மேற்றிசையைநோக்கி நடந்தனவென்றுகூறியிருப்பதால் மதுரைக்குக்கீழ்திக்கிற் குதிரைகள்புறப்பட்ட இடமாகிய திருப்பெருந்துறை இருந்ததென்றுகொள்ளல்வேண்டும்.

---

* இவை மந்திரிச்சருக்கம் 26, 27, 38, 39, 40-ஆம் பாடல்கள்.
† திருப்பெருந்துறைச்சருக்கம் 112-ஆம் பாட்டு.
‡ வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம், 20,27,28-ஆம்பாட்டுக்கள்.
$ திருவாதவூரடிகளுக்குபதேசித்தபடலம், 29-ஆம்பாட்டு.
¶ நரிபரியாக்கியபடலம், 43-ஆம்பாட்டு.

## வேறுசில ஆக்ஷேபங்களும் சமாதானங்களும்

மகா-ா-ா-ஸ்ரீ டி. பொன்னம்பலம்பிள்ளை என்ற ஒருவர் இவ்விஷயத்தைப்பற்றி எழுதியிருப்பதை இப்பொழுது தான் வாசித்துப்பார்த்தேன். இவர் அரபிக்குதிரைகள் திருப்பெருந்துறையில்வந்திறங்கியிருக்கின்றனவென்று பாண்டியன்கேள்வியுற்று மாணிக்கவாசகரை அவற்றைவாங்கிவர அங்கு அனுப்பினானென்றும், அராபிதேசம் பல துறைமுகங்களுள்ள மேல்சமுத்திரக்கரைக்கு எதிரிலுள்ள தாகையால் மாணிக்கவாசகர் மேல்சமுத்திரக்கரைக்கேபோ னார் என்றும், இதற்கு விரோதமாகச்சொல்லப்படும் ஆதாரங்கள்யாவற்றையும் புரட்டென்று தள்ளிப்போடவேண்டுமென் றவிதமாகவும் வாதித்திருக்கிறார். இவர் கூறியிருக்கும் விஷயங்களைத் தனித்தனியாய் ஆராய்ந்தறியலாம்.

I. திருவாதவூரர்புராணம் பிற்காலநூல் என்றும், அதை அதிகாரமாகநம்பக்கூடாதென்றும் அந்நூலிற் சோழநாட்டுக் கடற்கரையிற் குதிரைவந்திறங்கினவென்றும், சோழநாட்டுக் கடற்கரையை நோக்கிச்சென்றார் மாணிக்கவாசகர் என்றும் கூறியிருப்பதைத் தவறென்று தள்ளிப்போடவேண்டும் என்றும், ஆயினும், அப்புத்தகத்திலின்றெடுத்து மேல் அச்சிட்டிருக்கும் நான்காம்பாட்டிற் "கடமுமலைப்புங்கடந்து சென்றார்" என்று வர்ணித்திருப்பதைவேண்டுமாயின் மலைமார்க்கமாக மலையாளக்கரைக்குப்போனார் என்பதற்கு ஆதாரமாகவைத்துக்கொள்ளலாம் என்றும் இவர் எழுதியிருக்கிறார்.* திருப்பெருந்துறை மேல்சமுத்திரக்கரையில் இருக்கிறதென்றுகாட்ட இவ்விதவாதம் வேண்டியிருக்கிறது!!

"வளர்கந்தமுளா சந்த†"ன மரங்களால், திருப்பெருந்துறை சூழப்பெற்றிருந்தது என்று கூறியிருக்கிறதே. இவ்வாதாரத்தைக்கொண்டு அவ்வூர் மைசூர்த்தேசத்துக்காடுகளில் இருந்ததென்றுகொள்ளலாமா?

---

*"The Tamil Antiquary"இன் நான்காம் இலககப்புத்தகத்தின் 58, 68, 73-ஆம்பக்கங்களைப்பார்க்க.

† திருவாதவூரர்புராணம் திருப்பெருந்துறைசசருக்கம் 12-ஆம் பாட்டு.

II. 'துறை' என்றமொழிக்குக் கடற்றுறையென்ற பொருளைத்தவிர வேறுபொருள் இருப்பதாக ஒருவரும் நினைக்கக்கூடாதென்றெண்ணி மகா-௱-௱-ஸ்ரீ பொன்னம்பலம்பிள்ளையவர்கள் "திருப்பெருந்துறை"யின்பொருள் "பாவனூருள்ள பெரியபட்டினம்*" என்று அடிக்கடி எழுதியிருக்கிறார்கள்.

திருச்சோற்றுத்துறை, திருப்பராய்த்துறை, திருமாந்துறை திருவாவடுதுறைபோன்ற பாடல்பெற்ற துறையிற்றுப் பெயருள்ளஸ்தலங்களை உள்நாட்டூர்களென்றெண்ணி யாவரும் மயங்கவந்திருக்கின்றார்களே. "திருப்புணித்துறைக்கும் திருப்பெருந்துறைக்குமுள்ள ஒற்றுமையத்தையும்† பாருங்கள்" என்று எழுதியிருக்கும் பொன்னம்பலம்பிள்ளையவர்கள் மேற்குறித்துக்காட்டியவைகளுக்கு ஒற்றுமையத்தையுடைய பெயர்களைக்கொண்ட எற்ற கடற்றுறைப்பட்டினங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்களா?

III. அராபிதேசக்குதிரைகள் கடற்கரையில் இறங்கியிருக்கின்றனவென்று பாண்டியன்கேட்டு,மாணிக்கவாசகரை அவற்றைவாங்கவந்த அனுப்பினான் என்றும், பரிகள் மதுரையில் ஒரு அராபிதேசத்துக்கனவானால்நடத்தப்பட்டுவந்தனவென்றும் கூறியிருக்கிறார் ‡

நான் பார்த்திருக்கும் நூலொன்றிலும் பொன்னம்பலம்பிள்ளை கூறியிருப்பதற்கு. ஆதாரத்தைக்காணேன், தகுந்த ஆதாரத்தை யாராவது தயைசெய்து காட்டவேண்டும்.

---

* வீரவனப்புராணத்திலும் திருப்பெருந்துறைப்புராணத்திற் கூறியிருப்பதுபோல் ஆளுடையார்கோவில் நிலம்வெட்டியதும் நீர்ப்பெருக்கைக்காட்டியபடியால, திருப்பெருந்துறையென்னும் பெயரையடைந்தது என்று கூறியிருக்கிறது. 613-ஆம்விருத்தத்தைப்பார்க்க.

† "The Tamil Antiquary"இன் நான்காம் இலக்கத்தின் 71-ஆம்பக்கத்தில்"similarity of names"என்றுகூறியிருப்பதைப்பார்க்க.

‡ ஷை 69-ஆம்பக்கத்தையும் 62-ஆம்பக்கத்தையும் 63-ஆம்பக்கத்தையும் பார்க்க.

IV. திருப்பெருந்துறையிற் குதிரைகள்வந்திறங்கி யிருக்கின்றனவென்று பாண்டியன் கேள்விப்பட்டான் என்று பொன்னம்பலம்பிள்ளையவர்கள் கூறியிருக்கிறார்கள்.*

இதற்கும் ஆதாரம் விளங்கவில்லை. திருவாதவூரர் புராணத்தில்,

"தாதகிமார்பனெடும்புவிசார்தருமால்கடலின்கரை"யிற் குதிரைகள் இறங்கினவென்றும், திருவிளையாடற்புராணத்தில் "வேலையந்துறையில் வந்திறங்குவதெரிந்து" என்றும் கூறியிருக்கிறது.

V. குதிரைவாங்கத் திருப்பெருந்துறையைநோக்கியே மாணிக்கவாசகர் புறப்பட்டுப்போனாரென்றும் பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் கூறியிருக்கிறார்கள்.†

இதற்கும் ஆதாரம் விளங்கவில்லை.

வடமொழி ஹாலாஸ்யமாகாத்மியத்தில் இவர், கீழ்சமுத்திரக்கரையைநோக்கிச் சென்றாரென்றும், நடுவழியில், திருப்பெருந்துறையைக் கிட்டினதும் மனமுருகி அங்கேயே வாழ்நாளைக் கழிப்பதாகத் தீர்மானித்தாரென்றும், திருவாதவூரர்புராணத்தில்‡ வழிதப்பிப்பெருந்துறையை அடைந்தாரென்றும், திருவிளையாடற்புராணத்தில்§ இவர் கடற்கரைக்கு வழிகொண்டுநடக்குமுன் சுந்தரேசர் பிராமண குலக்குருவாகிப் பல சீடர்களுடன் (கருங்கடலுக்குச் சற்றுதூரத்திலுள்ளதும்) "கருணைவெள்ளப்பெருங்கடல்" நிறைந்ததுமான திருப்பெருந்துறையில் இவரை அடிமைகொள்ளக் கருதிக் குருந்தமரத்தடியின்கீழ் எழுந்தருளியிருந்தார் என்றும் கூறியிருக்கிறது

* ஷை 69-ஆம்பக்கத்தைப்பார்க்க.

† ஷை 59-ஆம்பக்கத்தைப்பார்க்க.

‡ திருவாதவூரர்புராணம் மந்திரிச்சருக்கம் 30-ஆம்பாட்டு இவர் பிரயாணத்தின் பயலைக்கூறுகின்றது.

§ இம்மூன்று புத்தகங்களையே மகா-ள-ள-ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளை பார்த்ததாக மேற்கூறிய "The Tamil Antiquary"இன் 58-ஆம்பக்கத்தால் ஏற்படும்.

VI. திருவாசகத்திலுள்ள கீர்த்தித்திருவகவலின் 25-28-ஆம் அடிகளில் மாணிக்கவாசகரே திருப்புணித்துறைதான் திருப்பெருந்துறை என்றுகூறியிருக்கிறார்கள் என்றும் எழுதியிருக்கிறார்* பொன்னம்பலம்பிள்ளையவர்கள்.

அவ்வடிகள் கீழே அச்சிடப்பட்டிருக்கின்றன.

25 ஏறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதிர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
30 கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
32 விற்பொரு வேடர்க் கீந்த விளைவும்......
35 அரியொடு பிரமற் களவறி யொண்ணா
நரியைக் குதிரை யாக்கிய நன்மையு......
44 மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
45 குதிரைச் சேவக னாகிய கொள்கையும்

25-29-ஆம் அடிகளிற் குடநாட்டில் நடந்த யாதோ ஒருலீலை கூறியிருக்கிறது. அக்கதையை அறியவிரும்புகிறவர்கள் அந்நாட்டு ஸ்தலங்களின்புராணங்களைவாசிக்க வேண்டும். பொன்னம்பலம்பிள்ளை அவர்கள் கூறியவிதம் அவ்வடிகளிற்கூறிய விளையாட்டிற்கும் நரியைப் பரியாக்கிய திருவிளையாட்டிற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. மாணிக்கவாசகரைப்பற்றி எழுதியிருக்கும் ஒரு நூலிலும் சிவபெருமான் உமாதேவியுடன் குதிரைச்சேவகனாய்த் தோன்றியருளியதாகக்கூறவில்லை. குடநாட்டின் திருவிளையாடல் 25-29-ஆம் அடிகளிற் கூறியிருப்பதுபோல், வேலம்புத்தூர் விளையாட்டு 29, 30-ஆம் அடிகளிலும், சாந்தம்புத்தூர்விளையாட்டு 31, 32-ஆம் அடிகளிலும், நரியைக்குதிரையாக்கியவிளையாட்டு 35, 36-ஆம் அடிகளிலும், அவற்றை மதுரைத் தெருவிற் குதிரைச்சேவகனாகநின்று சிவபெருமான்நடத்திய விஷயம் 44, 45-ஆம் அடிகளிலும் கூறப்பட்டிருக்கின்றன.

* ஷை 59-ஆம் பக்கத்தைப்பார்க்க.